கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் மற்றும் அதன் விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம் மற்றும் கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் (''சபை'') மற்றும் அதன் விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தினதும் கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தினதும் (''தொகுதி'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்ளை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மற்றும் தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியமலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில், 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி அதிகாரச் சட்டத்தில் 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்ட அதிகாரச்சட்டத்தில், 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டத்தில் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை

முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.5.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகயில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

தொகுதி

மறுப்பு அபிப்பிராயம்

தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. தொகுதியின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் (1.2) கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

1.2 தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக இந்த அறிக்கையின் 1.5.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு என்னால் தொடர்பாக முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்படுகின்றது.
தொகுதியிலுள்ள விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூகபாதுகாப்பு நலன் திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக இந்த அறிக்கையின் 1.5.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு என்னால் மறுப்பு அபிப்பிராயம் வெளியிட்டது..

தொகுதியிலுள்ள கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக இந்த அறிக்கையின் 1.5.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு என்னால் மறுப்பு அப்பிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கிழ் எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்று கணகப்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்று போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் மற்றும் அதன் தொகுதியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை மற்றும் அதன் தொகுதியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
சபையின் மற்றும் அதன் தொகுதியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடடிபாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் மற்றும் அதன் தொகுதியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் மற்றும் அதன் தொகுதியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

1.5 நிதிக்கூற்றுக்கள்

1.5.1 சபையின் நிதிக்கூற்றுக்கள்

1.5.1.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடானான இணக்கமின்மைகள்

	உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்	தொடர்புபட்ட தரப்பினரகளுடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்களின் மூலம் ஏற்பட்ட தாக்கம் மற்றும் திட்டங்களுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுகின்ற நடைமுறை	இலங்கை கணகீட்டு நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுதல்

மீதிகளுக்கிடையேயான வித்தியாசம் ரூபா 58.65 மில்லியனை கிடைக்க வேண்டிய கணக்கு மீதியில் செம்மையாக்குதல் மற்றும் சமூக பாதுகாப்பு பிரதிபலன் திட்டத்திற்காக பேணப்படுகின்ற நடைமுறைக் கணக்குகளில் உள்ளபடியான காசு உட்பாய்ச்சல் ரூபா 1,724.34 மில்லியன் மற்றும் உள்ளபடியான காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 1,475.25 மில்லியனை செயற்பாட்டு காசுப் பாய்ச்சல்களில் காட்டப்படாமையின் காரணமாக செயற்பாட்டு காசுப்பாய்ச்சல் ரூபா 190.44 மில்லியனால் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே பணமாக செலுத்திய ரூபா 2.14 மில்லியன் ஊழியர் மருத்துவ காப்புறுதிக் கட்டணமானது காசுப் பாய்ச்சல் கூற்றில் சமர்ப்பிக்கடாமையின் காரணமாக அப்பெறுமதியால் செயற்பாட்டுக் காசுப் பாய்ச்சல் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் ஊழியர் மருத்துவ காப்புறுதி நிதிய கணக்கின் மீதியில் வித்தியாசம் ரூபா 8.96 மில்லியன் அதிகரித்தல் முதலீட்டுக் காசுப் பாய்ச்சலில் அறிக்கையிடப்பட்டதன் காரணமாக முதலீட்டு காசுப் பாய்ச்சல் அத்தொகையால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் முதலீட்டின் மீது பெற்ற வட்டியான ரூபா 5.7 மில்லியன் முதலீட்டு காசுப் பாய்ச்சலில் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அத்தொகையால் முதலீட்டு காசுப் பாய்ச்சல் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	கணக்குகளின் தாக்கம் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான காசுப் பாய்ச்சலில் செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்பட்டது. ஊழியர் மருத்துவ காப்புறுதி நிதியம் ஐந்தொகையில் உரிமை மூலதனமாக காட்டப்பட்டுள்ளது. முதலீட்டு செயற்பாடுகளில் மருத்துவ பிரதிபலன் நிதியத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 5.22 மில்லியன் பணமும் ஆண்டின் முதலீட்டு வருமானம் ரூபா 5.88 மில்லியன் பணமும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அந்நிதியத்தின் மூலம் பிரதி பலன்களைச் செலுத்துதல் ரூபா 2.14 மில்லியன் தொகையாகும். அதற்கிணங்க முதலீட்டு செயற்பாடுகளில் மருத்துவ பிரதிபலன் நிதியத்தின் தேறிய அதிகரிப்பாக ரூபா 8.96 மில்லியன் காட்டப்பட்டுள்ளது.	வேண்டும்.

1.5.1.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை பயிர்ச்செய்கை சேத காப்புறுதி இழப்பீட்டுக் கொடுப்பனவுக்காக பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டியவையாக சபையின் இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்த ரூபா 4,249.62 கிடைக்க வேண்டிய வருமானம் 2023 ஆம் ஆண்டின் போது முழுத் தொகையும் திரண்ட நிதியத்திற்கு வரவு வைத்து	அமைச்சரவை பத்திரத்திற்கு இணங்க அட்டுறு அடிப்படையில் கிடைக்க வேண்டிய பயிர்ச் செய்கை சேத இழப்பீட்டு கொடுப்பனவு மீதான பிரதிபலன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் போது 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக பொதுத்திறைசேரி மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் அதற்கு பின்னைய	வருமானத்தை பதிவழிக்கும் போது அதனை அடிப்படையாகக் கொண்டு செயற்பாட்டு வருமானத்திலிருந்து கமநல காப்புறுதி நிதியத்திற்கு மாற்றுதல்களை மீளச்

	பதிவழிக்கப்பட்டிருந்தது. 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பாட்டு வருமானத்தில் 05 சதவீதம் கமநல காப்புறுதி நிதியத்திற்கு மாற்றப்பட்டுள்ளதனால் மேற்கூறிய பணம் தொடர்பாக அவ்வாறு செயற்பாட்டு வருமானத்திலிருந்து மாற்றப்பட்ட ரூபா 212.48 மில்லியன் தொகை 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கமநல காப்புறுதி நிதியத்திலிருந்து நீக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை.	ஆண்டுகளின் போது உரிய இழப்பீட்டுப் பணத்தை செலுத்துவதற்கு மாத்திரம் உரிய பணத்தை சபைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததனால் ரூபா 4,250 மில்லியன் பணம் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செயயப்பட்டிருந்தது. எனினும் பொதுத்திறைசேரியினால் அப்பணத்தை வழங்குவதற்கு முடியாமையால் கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்டது. அந்த ஆண்டுகளின் போது பெற்ற செயற்பாட்டு இலாபத்தின் அடிப்படையில் சரியாக ஒதுக்கத்திற்கு ஏறபாடு செய்யப்பட்டுள்ளது.	செம்மையாக்குதல் வேண்டும்.
(ஆ)	மஹியங்கனை, எம்பிலிபிடிய, அனுராதபுரம் ஆகிய நகரங்களில் அமைந்துள்ள 3 உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ள 76.6 பேர்ச்சஸ் காணி சபைக்குச் சொந்தமானதாக இருந்தும் அக்காணியை மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.	மஹியங்கனை, எம்பிலிபிடிய, அனுராதபுரம் ஆகிய உத்தியோகபூர்வ இல்லங்களின் காணிகளின் பெறுமதியும் எம்பிலிபிடிய உத்தியோகபூர்வ இல்லத்தின் பெறுமதியையும் மதிப்பீடு செய்வது சம்பந்தமாக தற்பொழுது மாவட்ட பிரதி/ உதவி பணிப்பாளர்களுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் துரிதமாக அந்த நடவடிக்கையை முடிவுறுத்தி மதிப்பீட்டுக் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காணியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும்.

1.5.2 கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்டம்

1.5.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

	உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 88 ஆம் பந்திக்கு முரணாக மீளாய்வாண்டின் போது விவசாயிகளிடமிருந்து கிடைத்த தவணைப் பண வருமானம், விவசாய ஓய்வூதியக்காரர்களின் பங்களிப்பு வருமானம் முதலீட்டு வட்டி என்பன உள்ளடங்கலாக	பங்களிப்பாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற தவணைப் பணம் 60 வயது பூர்த்தியடையும் போது பிரதிபலனாக செலுத்த வேண்டியதனால் அறவீடு செய்த தவணைப் பணமும் அதற்குரிய வட்டியும் சேர்த்து சபையின் நிதிய கணக்கிற்கு செம்மையாக்கி அதன் மூலம் எதிர்காலத்தில் செலுத்த	இலங்கை கணக்கீட:டு நியமத்தின் பிரகாரம் தவணைப்பண வருமானம் மற்றும் முதலீட்டு வட்டியை ஒரு வருமானமாகக் காட்டுதல்

	மீளாய்வாண்டின் போது பெற்ற ரூபா 143.56 மில்லியன் பணம் காலப்பகுதியின் வருமானமாக கணக்கீடு செய்யப்படாது திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கப்பட்டிருந்ததனால் அத்தொகையால் இலாபம் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.	வேண்டிய பொறுப்புக்காக நிதியத்தை வலுப்படுத்துதல் எதிர்பார்க்கப்பட்டது. காப்பீட்டு மதிப்பீட்டினை மேற்கொண்டதன் பின்னர் விவசாயிகளின் பொறுப்பினை உறுதியாக அடையாளங்கண்டு அதில் ஏதாவது பணம் மிகுதியாக இருக்குமாயின் அப்பணத்தை ஒரு வருமானமாக அடையாளங்காண்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது.	வேண்டும்.
(ஆ)	காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போர்து இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 04 ஆம் பந்தியின் பிரகாரம் பங்களிப்பாளர்களிடமிருந்து பெற்ற ரூபா 135.44 மில்லியன் தவணைப் பண வருமானத்தை செயற்பாட்டு வருமானத்தில் காட்டியதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவாகிய காசுப்பாய்ச்சல் அத்தொகையால் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 8.12 மில்லியன் முதலீட்டு வருமானத்தில் காட்டப்படாததன் காரணமாக முதலீட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவாகிய காசுப் பாய்ச்சல் அத்தொகையால் குறைத்து காட்டப்பட்டிருந்தது.	விவசாயிகள் செலுத்துகின்ற தவணைப் பணம் சபையினால் மீண்டும் விவசாயிகளுக்கு பிரதிபலனாக செலுத்த வேண்டியுள்ளதனால் அந்த தவணைப் பணத்தை பெறுதல் சபையின் செயற்பாட்டு வருமானமாக அடையாளங்காணப்படவில்லை. தவணைப் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் பெற்ற முதலீட்டுப் பெறுமதி நிதிச் செயற்பாடுகளில் காட்டப்பட்டுள்ளது. இத்தவணைப் பணத்தை அறவீடு செய்வதன் மூலம் கிடைக்கின்ற பணத்தை விவசாயிகளுக்கு மீண்டும் செலுத்துவதற்காக நிதி சேகரிக்கப்படுவதுடன் அது சபையின் ஒரு பொறுப்பாகும். அத்தவணைப் பணமும் முதலீட்டின் மூலம் பெற்ற பணத்திலிருந்து உருவாகிய வட்டி வருமானமும் அந்நிதியத்திற்கு செம்மையாக்கப்பட்டுள்ளது.	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தவணைப் பண வருமானத்தையும் முதலீட்டு வருமானத்தினையும் கவனத்திற்கு எடுத்து காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரித்தல் வேண்டும்.
(இ)	ஆண்டின் ஆரம்ப ஓய்வூதிய பொறுப்பில் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ஓய்வூதியப் பணத்தை கழிக்கையில் கிடைக்கின்ற இறுதி மீதிக்கு 11 சதவீததத்தினை சேர்த்து ஓய்வூதிய பொறுப்பினை கணிப்பீடு செய்கின்ற ஒரு நடைமுறை திட்டததினால் தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க 2024 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான ஆரம்ப மீதியாகிய ரூபா 86,898.44 மிலலியனில் ஓயவூதியம் செலுத்துதலானது ரூபா 4,845.12 மில்லியனை கழித்து அந்த மீதிக்கு 11 சதவீதமான ரூபா 9,025.86 மில்லியனை சேர்த்து இறுதி மீதியான ரூபா 91,079.18	காப்பீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்வதற்காக பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அதற்காக ஒரு காப்பீட்டு கணிப்பீட்டாளரோ அல்லது எந்தவொரு நிறுவனமோ அதற்காக முன்வந்திருக்கவில்லை. அதற்கிணங்க கடைசியாக மேற்கொள்ளப்பட்ட காப்பீட்டு மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு உரிய கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காப்பீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

மில்லியன் ஓய்வூதிய பொறுப்பாக அடையாளங்காணப்பட்டிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பிரிவின் பிரகாரம் காப்பீட்டு மதிப்பீடு செய்யப்படாமலே குறிப்பிட்ட நடைமுறையைப் பனிபற்றி கணிப்பீடு செய்யப்பட்ட ஓய்வூதியப் பெறுமதியின் சரியான தன்மை தொடர்பாக திருப்தி கொள்ள முடியாதுள்ளது.

1.5.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2024 நவம்பர் மற்றும் திசெம்பர் தொடர்பாக விவசாய ஓய்வூதியக்காரர்களின் பங்களிப்பு வருமானம் முறையே ரூபா 8.97 மில்லியன் மற்றும் ரூபா 8.97 மில்லியனாக இருந்ததுடன் அப்பெறுமதியை விவசாய ஓய்வூதியக்காரர்களின் பங்களிப்பு வருமான கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக செலுத்த வேண்டிய ஓய்வூதிய கணக்கிற்கு செலவு வைத்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 17.94 மில்லியனால் குறைத:து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் நடைமுறைப் பொறுப்புக்கள் அத்தொகையால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.	சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	ஓய்வூதியக்காரர்களின் பங்களிப்பு சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.
(ஆ)	திட்டத்தின் கூட்டு ஆயுள் காப்புறுதி திட்டத்தின் மூலம் 18 இற்கும் 54 இற்கும் இடைப்பட்ட வயதுடைய பங்பளிப்பாளர்கள் ஓய்வூதயித்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் மரணமடைதல், முழுமையாக மற்றும் அரைகுறையாக பலவீனமடைதல் என்பவற்றிற்காக கொடுப்பனவு செய்யவேண்டி ஏற்படுகின்ற பணிக்கொடை கொடுப்பனவிற்காக 2024 ஆம் ஆணடின் போது 266,297 பங்களிப்பாளர்களுக்கு ரூபா 15.98 மில்லியன் பெறுமதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களில் 256,616 நபர்கள் செயற்பாடற்ற பங்களிப்பாளர்களானதுடன் அவர்களில் மரணமடைந்த எண்ணிக்கை மற்றும் உண்மையாக செயற்பாடற்ற பங்களிப்பாளர்களின் எண்ணிக்கையை உறுதிப்படுத்திக்கொள்ளாது மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்திற்காக காப்பீட்டு மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதோடு இந்த நிதியறத்திற்காகவும் காப்பீட்டு மதிப்பீட்டினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இப்பெறுமதியை சரியாக அடையாளங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன்.	செயற்படுகின்ற பங்களிப்பாளர்களை அடையாளங்கண்டு கூட்டு ஆயுள் காப்புறுதி தவணைப் பணத்திற்காக ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

1.5.2.3 நிதியம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
திட்டத்தின் முழுச் சொத்துக்கள் ரூபா 3,062.15 மில்லியன் மற்றும் முழுப்பொறுப்புக்கள் ரூபா 94,351.63 மில்லியனாக இருந்ததனால் சொத்துக்களை மிகைத்த பொறுப்புக்கள் ரூபா 91,289.48 மில்லியனும் முழு நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 1,125.05 மில்லியன் மற்றும் முழு நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 3,222.01 மில்லியனாக இருந்ததனால் நடைமுறைச் சொத்துக்களை மிகைத்த நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 2,096.96 மிலலியனும் ஆனதுடன் திறைசேரியின் பங்களிப்பு இல்லாது திட்டத்தினை பேண முடியாத நலைமை காணப்படுவதனால் திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் சிக்கலுடையதாகும்.	அரசாங்கத்தின் பங்களிப்பாக (தொடக்க மூலதனம்) ரூபா 750 மில்லியன் நிதியை ஈடுபடுத்துவதற்கு பிரேரிக்கப்பட்டுருந்தும் சபைக்கு அது கிடைக்கவில்லை. தற்பொழுது ஓய்வூதிய பொறுப்பு வருடாந்தம் அதிகரிப்பதுடன் திட்டத்திற்காக நிதி இல்லாமையும் தவணைப்பணத்தை அதிகரிக்காது பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க பிரதிபலன் பணத்தை அதிகரித்ததன் காரணமாகவும் படிப்படியாக விவசாயிகளின் பங்களிப்பு குறைவடைவதன் மூலம் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஓய்வூதியம் செலுத்தப்படுகின்றது.	திட்டத்தில் சொத்துக்களை மிகைக்காத வகையில் பொறுப்புக்கள் பேணப்படுதல் வேண்டும்.

1.5.2.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
விவசாயிகளின் ஆயுள் தரவு தகவல்களை நாளது வளரயாக்காமையின் காரணமாக மரணமடைந்த மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் உரிமையை பெற்றுக்கொள்வதற்கு முன்வராத விவசாயிகளின் ஓய்வூதியம் தொடர்ச்சியாக தபால் அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. 2024 ஆம் ஆண்டின் போது விவசாயிகளால் பொறுப்பேறகப்படாமையால் தபால் அலுவலங்களினால் திருப்பி அனுப்பிய ஓய்வூதியம் ரூபா 469.25 மில்லியனானதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அத்திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 99.25 மில்லியனாகும் அந்த மீதி தயாரிக்கப்பட்டுள்ள முறைமையையும் ஒவ்வொரு விவசாயி தொடர்பான விபரமும் உள்ளடக்கப்பட்ட தகவல் முறைமை இல்லாததனால் மீதிகளின் சரியான தன்மையை உறுதிபடுத்த முடியாதுள்ளது.	செலுத்தப்படாத ஓய்வூதியங்கள் தொடர்பாக அந்த பங்களிப்பாளர்களின் விபரங்களை உள்ளடக்கிய ஒரு அறிக்கையை சபைக்கு அனுப்புமாறு மாவட்ட கணக்காளர்களுக்கு தெரியப்படுத்தப்ட்டள்ளதுடன் தற்பொழுது மாதாந்தம் ஓய்வூதிய நலன்களைப் பெற்றுக்கொள்ளாத பங்களிப்பாளர்களின் அறிக்கையினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. . தபால் திணைக்கள கணக்காளர்களுக்கு தெரியப்படுத்தி தாமதமின்றி உரிய அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிமை கோரப்படாத பணம் தொடர்பான தகவல்களை நாளதுவரையாக்கி அதற்கிணங்க தவணைப் பணம் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

1.5..3 கடற்றொழிலாளர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள்

1.5.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
ஆண்டின் ஆரம்ப ஓய்வூதிய பொறுப்பில் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ஓய்வூதியப் பணத்தை கழிகைகயில் கிடைக்கும் இறுதி மீதிக்கு 11 சதவீத்தினை சேர்த்து ஓய்வூதியப் பொறுப்பினை கணிக்கும் நடைமுறை திட்டத்தினால் தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2024-01-01 ஆந் திகதியில் உள்ளவாறான ஆரம்ப மீதியான ரூபா 5,532.35 மில்லியனுக்கு கடற்றொழிலாளர் ஓய்வூதியத்தினைச் செலுத்துதல் ரூபா 88.35 மில்லினை கழித்த மீதிக்கு 11 சதவீதமான ரூபா 598.84 மில்லியன் வட்டியை சேர்த்து இறுதி மீதியாக ரூபா 6,042.84 மில்லியனாக அடையாளம் காணப்படடிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பிரிவின் பிரகாரம் காப்பீட்டு மதிப்பீட்டினைச் செய்யாது அதற்கு முரணாக மேற்கூறியவாறு ஓய்வூதியப் பொறுப்பினை கணித:து நிதிக்கூற்றுக்களில் காட்டியிருந்தமை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.	கடற்றொழிலாளர் ஓய்வூதிய பொறுப்பு திட்டத்தின் கூட்டு ஆயுள் காப்புறுதி நிதியத்தின் வருடாந்த பொறுப்பும் காப்பீட்டு மதிப்பீட்டினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் கடற்றொழிலாளர் ஓய்வூதிய பொறுப்பும் அதற்கிணங்க கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கடைசியாக மேற்கொண்ட காப்பீட்டு மதிப்பீட்டினை அடிபபடையாகக் கொண்டு உரிய கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.	நியமத்தின் பிரகாரம் காப்பீட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

1.5.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2024 திசெம்பர் 31 ஆந் தகிதியில் உள்ளவாறு திறைசேரி பிணை முறியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 429.49 மில்லியனாக இருந்ததுடன் அப்பெறுமதியில் 2023 ஆம் ஆண்டில் திறைசேரி பிணை முறியினை மதிப்பீடு செய்யும் போது மிகையாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்த பெறுமதியான ரூபா 16.52 மில்லியனை கழித்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான திறைசேரி பிணைமுறியின் பெறுமதி அப்பெறுமதியால் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	இந்நிலைமையினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுகப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன்.	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் திறைசேரி பிணை முறியின் மதிப்பீட்டுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

1.5.3.3 நிதியம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
திட்டத்தின் முழுச் சொத்துக்கள் ரூபா 743.33 மில்லியனாகவும் முழுப் பொறுப்புக்கள் ரூபா 6,125..28 மில்லியனாகவும் காணப்பட்டதுடன் சொத்துக்களை மிகைத்த பொறுப்புக்கள் ரூபா 5,381.95 மில்லியனாகும். இப்பாதகமான நிலைமை திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருப்பது தொடர்பாக பாதகமாக தாக்கமளித்திருந்தது.	இத்திட்டமானது சுய நிதியின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்படாததுடன் தவணைப் பணத்தை தீர்மானிக்கும் போது அரசாங்க நிவாரணத்திற்கு உள்ளீர்க்கப்படுவதனால் இந்நிலைமை உருவாகியுள்ளது. அதற்கிணங்க வருடாந்தம் செலுத்த வேண்டிய ஓய்வூதிய பொறுப்பு அதிகரித்துச் செய்வதுடன் அதன் காரணமாக தேறிய சொத்துக்களின் பெறுமதியும் குறைவடைகின்றது. அக்காரணத்தினால் இத்திட்டத்திற்காக புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளுதல் அதிகரிககப்படுவதில்லை.	திட்டத்தின் முழு தேறிய சொத்துக்கள் மறைப் பெறுமதியாகுவதை ன தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6 கிடைக்க வேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
சபையின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 10 ஆண்டுகளுக்கும் 25 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த ரூபா 0.43 மில்லியன் மற்றும் 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த ரூபா 0.15 மில்லியனான இடர் கடன் மீதி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	நீண்டகாலமாக அறவிடப்படாத இந்த மீதிகளை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரைக்கு இணங்க பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் 2025 ஆம் ஆண்டில் கணக்கிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இடர் கடன் மீதி அறவீடு செய்யப்படுதல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள
(அ)	2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதி, கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்தின் 12(3)(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 20 ஆம்	சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற கமத்தொழில் காப்புறுதி செயற்பாடுகளுக்காக காப்புறுதி கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்தின்	சபையினால் காப்புறுதித் திட்டம் வழங்கப்பட வேண்டியதானது கமத்தொழில் உபகரணங்கள் மற்றும் கருவிகளுக்காக	வாகனங்களுக்கா ன மூனறாந் தரப்பினர் காப்புறுதிக்காக காப்புறுதி ஒழுங்குபடுத்துதல்

	இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை அதிகாரச் சட்டத்தின் 29 ஆம் பிரிவு	காப்புறுதி கட்டுப்பாட்டு அதிகார சபையினால் ஒழுங்படுத்துதல் அவசியமில்லாத போதிலும் இந்த கமத்தொழில் அற்ற மூன்றாந் தரப்பினர் காப்புறுதி நடவடிக்கைகளுக்காக காப்புறுதி ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவின் மேற்பார்வை மற்றும் அதன் சட்டவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை	மாத்திரமின்றி கமத்தொழிலாளரிடமுள்ள அனைத்து நிரந்தர மற்றும் அசையும் ஆதனங்களுக்காகவும் 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதி கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்தின் 12(3) ஆம் பிரிவின் பிரகாரம் சபைக்கு இக்காப்புறுதித் திட்டத்திற்காக சட்டரீதியான தடை இல்லை. மேலும் 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி அதிகாரச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ‘‘காப்புறுதி கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்திற்கு முரணாக ஏதும் குறிப்பிடப்பட்டிருந்தும் இந்த அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் அமுலாக்கப்பட வேண்டியதுடன் ஏதும் மோதல்கள் அல்லது இணக்கப்பாடுகள் உருவாகும் சந்தர்ப்பத்தில் இந்த அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் அது ஏனைய எந்தச் சட்டத்திற்கும் அப்பாற்பட்டதாக அமுலாக்கப்பட வேண்டும்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க சபை தேவைப்படும் சந்தர்ப்பத்தில் காப்புறுதி ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவின் சட்ட விதிகள் தொடர்புபடுத்தப்படும்.	ஆணைக்குழுவின் சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை அதிகாரச் சட்டம்	கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் குறிக்கோள் விவசாயிகளின் நலன்புரியாக இருந்த போதிலும் சபை அக்குறிக்கோளினை மீறி மூன்றாந் தரப்பு மோட்டார்	அதிகாரச் சட்டத்தின் (7) ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளுக்கு இணங்க மூன்றாந் தரப்பு காப்புறுதித்திட்டம் அறிமுகப்படுத்தபட்டிருந்தத	உழவு இயந்திரத்தினை தவிர்த்து ஏனைய மோட்டார் வாகனங்களின் மூன்றாந்தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித்

வாகன காப்புறுதித் திட்டத்தினை ஆரம்பித்து பேணி வருகின்றது. 2007 ஆம் ஆண்டின் போது உழவு இயந்திரத்திற்காக மாத்திரம் மூன்றாந் தரப்பு காப்புறுதியினை வழங்குவதற்கு சட்டமா அதிபர் தீணைகளத்தினால் வழங்கிய அங்கீகாரத்தினைப் போல மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் சமர்ப்பித்த கடிதத்தின் பிரகாரம் விவசாய இயந்திரங்களுக்காக மாத்திரம் காப்புறுதிச் சான்றிதழினை வழங்குவதற்கு அதிகாரம் உள்ளது எனக் காட்டப்பட்டிருந்தும் அதற்கு முரணாக ஏனைய வாகனங்களுக்காகவும் மூன்றாந் தரப்பு காப்புறுதியினை வழங்குதல் 2015 ஆம் ஆண்டின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

ானது சபையை தோற்றுவிக்கும் தொடக்க குறிக்கோளாகிய கமத்தொழிலாளர்களின் நலன்புரி மற்றும் பாதுகாப்பினை அமுல்படுத்துவதற்காக அவர்களின் ஆதனங்களை பாதுகாப்பதற்காகவாகும். அதற்கிணங்க இத்திட்டமானது சபையை தோற்றுவிக்கும் குறிக்கோளிற்கு முரணானது அல்ல. 2007 ஆம் ஆண்டின் போது காப்புறுதிச் சபையினால் உழவு இயந்திரத்திற்கு காப்புறுதி செய்தல் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் போது சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து உழவு இயந்திர காப்புறுதிக்காக ஆலோசனைகளைப் பெற்று அதிகாரச் சட்டத்தின் 7(ஆ) பிரிவின் பிரகாரம் மற்றும் 29 ஆம் பிரிவின் பிரகாரம் சபைக்கு இக்காப்புறுதித் திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு சட்டரீதியான தடை இல்லை. மூன்றாந் தரப்பு காப்புறுதி திட்டத்தினை அமுல்படுத்துவது சம்பந்தமாக ஏனைய ஒரு தனியார் காப்புறுதிக் கம்பனி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 2019 ஆம் ஆண்டில் ஒரு வழக்கினை தொடுத்திருந்தது. (வழக்கு இலக்கம் -CA WART-0269-19) இதன் சட்ட நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களம் தோன்றியுள்ளதுடன் வழக்கு நடவடிக்கையை முடிவுறுத்துவதற்கு (2023/02/14 ஆந் திகதி) தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இத்திட்டத்தினை

திட்டத்திற்காக சட்டமா அதிபதிரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

			அமுல்ப்படுத்துவதற்கு இருந்த சட்டரீதியான பிரச்சினையுடனான நிலைமை நீங்கியுள்ளது. அவ்வாறு முடிவடைந்த வழக்கு நடவடிக்கைகளின் எண்ணிக்கை 07 ஆகும். மேலும் காப்புறுதி ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவினால் உரிமையை தீர்த்துவைப்பதற்காக வழங்கப்பட்ட 2024-03 ஆந் திகதிய சுற்றறிக்கையினை சபைக்கு இணக்கமாக்கி கொள்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் அந்த சுற்றறிக்கையானது சபையில் அமுல்ப்படுத்தப்படும்.	
(இ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாண கோவை			
(i)	நி.பி 381	சபையின் 45 வங்கி கணக்குகளை உள்ளடக்கி தொகுதியின் 57 வங்கி கணக்குகள் திறைசேரியின் அங்கீகாரமில்லாது ஆரம்பித்து பேணப்பட்டு வருகின்றத.	சபையின் தலைமை அலுவலகம் மற்றும் 30 மாவட்ட அலுவலகங்களின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அதாவது தவணைப் பணத்தை சேகரித்தல், கொடுப்பனவுகளை தீர்த்துவைத்தல் முதலியன சம்பந்தமாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இக்கணக்குகள் ஆரம்பித்து பேணப்படுகின்றது.	வங்கி கணக்குகளை ஆரம்பித்து செயற்படுத்துவதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும்.
(ii)	நி.பி 387	காசோலைகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து கொடுப்பனவகளுக்குமாக தமது வங்கி மீதி போதுமானதா என்று கொடுப்பனவு செய்கின்ற உத்தியோகத்தரினால் தொடர்ச்சியாக ஆராய்ந்து பார்க்க வேண்டியதுடன் அரசாங்கத்தின் ஏதாவது	தலைமை அலுவலகத்தின் மூலம் மாவட்ட அலுவலகங்களின் நடைமுறைக் கணக்குகளுக்கு மாவட்ட அலுவலகங்களின் தேவைப்பாட்டிற்காக பணம் செலவு வைக்கப்படும். அதன் போது நடைமுறைக் கணக்கிற்கு	காசேட்டினை சரியாக பேணுதல் வேண்டும்.

		வங்கி கணக்கிலிருந்து மேலதிகப்பற்றினை பெற்றுக்கொள்ளல் தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் கேகாலை, வவுனியா, கம்பஹா ஆகி மாவட்ட அலுவலக காசேட்டின் வங்கி மீதியினை மிகைத்து காசோலை எழுதப்பட்டிருந்தது.	செலவுவைக்கப்பட்ட பணம் காசேட்டில் பிழையாகப் பதியப்பட்டு நடைமுறைக் கணக்கிலிருந்து பணம் நீக்கப்பட்டதனால் இந்நிலைமை உருவாகியுள்ளது. இந்நிலைமையை சரிசெய்வதற்காக உரிய மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது அந்த நிலைமையை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
(ஈ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.4 ஆம் பிரிவு	வெற்றிடமாக இருக்கும் பதவிகளில் பதில் கடமை பார்ப்பதற்காக அப்பதவியை வகிப்பதற்கு அனைத்து வகைகளிலும் முழுமையான தகமையைப் பெற்றிருக்காத ஒரு உத்தியோகத்தரினை நியமிக்காதிருக்க வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்காக பெற்றிருக்க வேண்டிய தகமைகள் இல்லாத 05 உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளிலும் ஒரு உத்தியோகத்தர் பணிப்பாளர் (நிருவாகம்) பதவியிலும் 07 மாதங்களிலிருந்து 04 ஆண்டுகள் வரையான காலம் தொடர்ச்சியாக பதில் கடமை பார்க்கும் காலத்தை நீடித்து நியமனம் வழங்கப்பட்டிருந்தன.	கடந்த ஆண்டுகளின் போது அரசாங்கத்தினால் அரசாங்க நிறுவனங்களுக்கு உத்தியோகததர்களை சேர்த்துக்கொள்ளல் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததனால் உரிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக அத்தியவசியமான உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். தற்பொழுது வெற்றிடமாக உள்ள பதவிகளுக்காக உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு கடிதத்தின் மூலம் பிரதம மந்திரியின் அலுவலகத்திடமிருந்து அங்கீகாரம் வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளது.	பதில் கடமை பார்க்கும் பதவிகளுக்காக தகமையுள்ள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.
(உ)	2022 திசெம்பர் 14 ஆந் திகதிய 2310/29 ஆம் இலக்க	சட்டத்திற்கு முரணாக -09 பதவிகளுக்கு 22 உத்தியோகத்தர்கள் 06	சபையின் செயற்பாட்டு நடைமுறைகளைப் பேணுவதற்கும் நாளுக்கு	காணப்படுகின்ற பதில் கடமை பார்க்கும்

	நடைமுறை சட்ட விதிகளுக்கான அதிவிசேட வர்த்தமானியின் IX ஆம் அத்தியாயத்தின் 131 ஆம் பிரிவு	மாதங்களிலிருந்து 10 ஆண்டுகள் வரையான நீண்டகாலம் பதில் கடமை அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருந்தனர்.	நாள் துறைசார் நடவடிக்கைகள் விரிவடைவதுடன் அதற்காக புதிய உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கும் அங்கீகாரம் வேண்டப்பட்டிருந்தும் இன்றுவரை அதற்காக அங்கீகாரம் கிடைக்கவில்லை.	பதவிகளின் கடமைகளை மீளாய்வு செய்து பதவிகளின் தேவைப்பாட்டினை தீர்மானித்தல் வேண்டும்.
(ஊ)	கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் முகாமைத்துவ சேவை தரத்திலுள்ள பதவிகளுக்கான ஆட்சேர்பபு நடைமுறையின் 4.3.2.2 ஆம் பிரிவு	உதவிப் பணிப்பாளர் (நிருவாகமும் மனித வளங்களும்) பதவிக்காக வெளி விண்ணப்பதாரர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது தகமைகள் மற்றும் அனுபவங்கள் இல்லாத ஒரு உத்தியோகத்தர் அதற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டிருந் தனர.	இந்த உத்தியோகத்தரினால் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்த ஆவணங்களில் காணப்பட்ட பிரச்சினையான நிலைமையின் அடிப்டையில் வரிசை அமைச்சின் விசாரணை சபையினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பெறுபேறு 547 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்ட தீரமானத்திற்கு இணங்க இந்த உத்தியோகத்தரின் வேலை இடைநிறுத்திவைக்கப்பட்ட து.	ஆட்சேர்பபு நடைமுறையின் பிரகாரம் தகமைகள் மற்றும் அனுபவங்கள் உள்ள நபரினை சேர்த்துக்கொள்வ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	2015 மே 25 ஆந் திகதிய PED 1/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி	சுற்றறிக்கைக்கு முரணாக MM I-I சேவைத் தரத்தினைச் சேர்ந்த 19 உத்தியோகத்தர்களுக்கு 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 3.22 மில்லியன் மற்றும் 15 உத்தியோகத்தர்களுக்கு 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 1.18 மில்லியன் போக்குவரத்துப் படி செலுத்தப்பட்டது.	இப்படிக் கொடுப்பனவு சம்பந்தமாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறறுக்கொள்ளப்பட்டது. விவசாய அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இன்றுவரை அதற்காக பதில் கிடைக்கவில்லை.	சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக் கு இணங்க போக்குவரத்துப் படிகள் செலுத்தப்படுதல் வேண்டும்.
(ஏ)	2022 ஒக்தோபர் 06 ஆந் திகதிய 06/2022 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை	சுற்றறிக்கைக்கு முரணாக 60 வயதினை மிகைத்த 04 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு அங்கீகாரம் இல்லாது சம்பளமும் படிகளுமாக ரூபா 6.79 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.	நீண்டகாலமாக இந்த வெற்றிடம் நிரப்பபடாமையால் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக 531/18 ஆம் இலக்க பணிப்பாளர் சபை	60 வயதினைப் பூரணப்படுத்தியுள் ள ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கா க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம்

			பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் மூன்று உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டு இருக்க இரண்டு உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றுள்ளனர்.	பெற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும்.`
(ஐ)	2022 யூலை 08 ஆந் திகதிய 02/2022 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டிக் கோவையின் 1.2.5 ஆம் பிரிவு	நிர்ணயிக்கப்பட்ட ஒரு செயற்பாட்டிற்காக ஒரு நியதிச்சட்ட நிறுவனத்திற்கு பரிசு/ மானிமாக கிடைக்கின்ற பணம் உரிய வரிசை அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் மொபிடெல் நிறுவனத்திடமிருந்து பெற்ற ரூபா ஒரு மில்லியன் பணம் அவ்வாறு அனுப்பிவைக்கப்படாது வங்கி கணக்கில். நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	சபையினால் தொலைத் தொடர்பு வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள மொபிடெல் நிறுவனத்தின் மூலம் ரூபா ஒரு மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. இந்த தொடர்பாடல் கொடுப்பனவிற்குள் ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து அறவிடப்பட்ட பணமும் காணப்படுவதனால் இப்பணத்தை ஊழியர் நலன்புரிக்காக ஈடுபடுத்துவதற்கு விவசாய அமைச்சிடம் தற்பொழுது அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது. கிடைத்த பணம் சபையின் பெயரில் காணப்படுகின்ற நிருவாக வங்கி கணக்கில் ஒரு மீதியாக காணப்பட்டது.	சபைக்கு உரிமை இல்லாத பணத்தை உரிய வரிசை அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பத்தல் வேண்டும்.
(ஒ)	2019 செப்தெம்பர் 02 ஆந் திகதிய 07/2017 ஆம் இலக்க (திருத்தம் II) கமத்தொழில், கிராமிய பொருளாதார நடவடிக்கைகள், நீர்ப்பாசன கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு சுற்றறிக்கை			
	(i) 03 ஆம் பிரிவு	(a)உத்தியோகத்தர்களினால் இடம்பெறுகின்ற குறைபாடுகளின் காரணமாக பயிர்ச் சேதங்கள் ஏற்பட்ட	தற்பொழுது கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு சில கடிதங்கள் அனுப்பிவைத்து	இழப்பீட்டு கொடுப்பனவின் போது உத்தியோகத்தர்களால் ஏற்படுகின்ற

விவசாயிகளுக்கு செலுத்த வேண்டிய இழப்பீடு இல்லாமல் ஆக்கப்பட்டிருந்ததுடன் 2022/23 பெரும்போகத்தின் போது சபைக்கு கிடைத்த விண்ணப்பங்களில் 22.41 சதவீதம் நிராகரிக்கப்பட்டிருந்தது. உரிய உத்தியோகத்தர்கள் கடமைகளைச் செய்யத் தவறியமை தொடர்பாக கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மற்றும் பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களின் மூலம் இடம்பெறுகின்ற குறைபாடுகளைக் குறைத்து பயிர்ச் செய்கை காப்புறுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டது.	தாமதங்களையும் குறைபாடுகளையும் குறைப்பதற்கு பொருத்தமான உள்ளக மதிப்பீட்டு முறைமையை அறிமுகப்படுத்துதல் வேண்டும்.
(b) விளைச்சலை அறுவடை செய்வதற்கு எதிர்பார்தத திகதிக்கு முன்னர் பௌதீக பரீட்சிப்பினை மேற்கொண்டு சேதங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் விளைச்சலினை அறுவடை செய்ததன் பின்னர் பௌதீக பரீட்சிப்பினை மேற்கொண்டு ‘‘விளைச்சல் அறுவடை செய்யப்பட்டுள்ளது’’ என்பதாக விண்ணப்பங்களில் குறிப்பிட்டு சேதம் இல்லை என்பதாகக் கருதி 2022/23 பெரும் போகத்தில் 05 விண்ணபப் பத்திரங்களுக்கும் 2023 சிறு போகத்தில் 731 விண்ணப்ப பத்திரங்களுக்கும்	விளைச்சலினை அறுவடை செய்துள்ள சந்தர்ப்பங்களின் போது இழப்பீட்டு ஆவணங்களில் விளைச்சல் அறுவடை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடபபட்டிருக்குமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் இழப்பீடு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவ்வான சந்தர்ப்பங்களின் போது விவசாயிகளின் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டிருக்குமாயின் அவற்றினை மீண்டும் கவனித்துப் பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	விளைச்சலினை அறுவடை செய்வதற்கு முன்னர் பயிர்ச்செய்கை சேதத்தினை பரீட்சிக்க கூடிய ஒரு உள்ளக மதிப்பீட்டு முறைமை அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும்.

		2023/24 பெரும் போகத்தில் 107 விண்ணப்ப பத்திரங்களுக்குமாக இழப்பீட்டுக் கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டிருந் தன.		
(ii)	04 ஆம் பிரிவு	2022/23 பெரும் போகம் தொடர்பான பயிர்ச்செய்பைக சேதத்திற்கான இழப்பீட்டு கோரிக்கைகளைச் சமர்ப்பித்து இழப்பீட்டுக் கொடுப்பனவிற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள 39,455 விவசாயிகளில் 9,513 விவசாயிகளுக்கு சதவீதமாக 25 சதவீதத்திற்கு இழப்பீடு செலுத்துவதற்கு ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது.	2023/24 பெரும்போகத்திற்குரிய இழப்பீட்டுக் கொடுப்பனவுகளுக்கு உரிய தாமதங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் 2024/25 பெரும் போகத்தில் இருந்து இழப்பீட்டுக் கொடுப்பனவினை துரிதப்படுத்துவதற்கு நடவடிககை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2024/25 பெரும் போகத்தில் பயிர்ச் செய்கை சேதமடைந்த விவசாயிகளில் 70 சதவீதம் அளவில் போகத்தினை முடிவுறுத்துவதற்கு முன்னர் இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் ஏனைய அனைத்து இழப்பீடுகளையும் யூன் மாதமளவில் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	இழப்பீட்டுக் கொடுப்பனவு தாமதங்களை குறைக்க கூடிய வகையிலான உள்ளக மதிப்பீட்டு முறைமையினை அறிமுகப்படுத்துத ல வேண்டும்.
(iii)	05 ஆம் பிரிவு	17 மாவட்ட அலுவலகங்களினால் வழங்கிய தகவல்களின் பிரகாரம் 2022/23 பெரும் போகத்தில் இழப்பீடு வழங்கிய 30,022 விவசாயிகளிடமிருந்து விபத்து: காப்புறுதி தவணைப் பண வருமானமாக ரூபா 12.23 மில்லியன் நிறுத்திவைக்கப்பட்டிருந்த துடன் 20,352 விவசாயிகளுக்கு உறுதிகள்	பயிர்ச்செய்கை இழப்பீட்டுப் பணத்தை விடுவிக்கும் போது இழப்பீட்டுப் பணத்திலிருந்து காப்புறுதி தவணைப் பணத்தினை கழித்து வருடாந்தம் விபத்துக் காப்புறுதி உறுதியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இழப்பீட்டுப் பணத்தை விடுவித்தன் பின்னர் SMS வாயிலாகவும் இணையதள பக்கத்தின்	உறுதி வழங்கப்படுதல் வேண்டும்.

		வழங்கப்படவில்லை.	மூலமும் மற்றும் அனைத்து கமநல சேவை நிலையங்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலமும் விபத்துக் காப்புறுதி உறுதி உள்ளது என தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் 1918 ஆம் இலக்க தொலைபேசியினூடாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. காப்புறுதி உறுதியினை வழங்குவதற்காக செலவு செய்யப்படும் கிரயம் பாரிய அளவில் அதிகரித்துள்ளதனால் அதற்காக தனியான செயற்பாட்டு செலவினை விவசாயிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாததனால் இந்த நடைமுறையினூடாக விவசாயிகளுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
(ஓ)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை மற்றும் திருத்திய நிதிப்பிரமாணம் 371(2)(ஆ)	சுற்றறிக்கை மற்றும் திருத்திய நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக ரூபா 0.11 மில்லியனிலிருந்து ரூபா 9.99 மில்லியன் வரையிலான வீச்சிற்குள் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க பல்வேறு செயற்பாடுகளுக்காக முற்பணங்களை வழங்கும் 70 சந்தர்ப்பங்களில் உச்ச அளவான முற்பண எல்லையை மிகைத்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆயத்தப்படுத்தல் உப கட்டுநிதியின் பெறுமதி ரூபா 23.69 மில்லியனாக இருந்ததுடன் மூலதன முற்பணங்களின் கீழ் 08 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த முற்பணங்களின் பெறுமதி	சபையின் விசேட செயற்பாட்டு தேவைப்பாடு தொடர்பாக கவனித்துப் பார்த்து பணிப்பாளர் சபையினால் ஒரு நிறைவேற்று உத்தியோகத்தருக்கு வழங்கக்கூடிய முற்பணத் தொகையின் உச்ச எல்லையினை ரூபா 200,000 இற்கு உட்பட்டு நடவடிக்கை எடுப்பதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. மூலதன முற்பணத்தின் கீழ் வழங்கப்படுகின்ற பணம் மாவட்ட செயலாளருக்கு விடுவிக்கப்படுவதுடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அது வியாபார பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குகின்ற ஒரு நிறுவனத்திற்கு	அங்கீகரித்த எல்லையினை மிகைத்து முற்பணங்களை வழங்குவதற்காக திறைசேரியின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும்.

		ரூபா 31.83 மில்லியனாகும்.	விடுவித்தல் இடம்பெறமாட்டாது . மாவட்ட செயலகத்தினூடாக பெறுகை நடைமுறைகள் முடிவடைந்ததன் பின்னர் அதனை தீர்த்துவைத்தல் ஆவணங்களை சபைக்கு வழங்கியதன் பின்னர் இந்த நடவடிக்கை நிறைவேற்றப்படுகின்றது.	
(ஔ)	2018 திசெம்பர் 31 ஆந் திகதிய 04/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த நிதியற்ற சொத்துக்களை மதிபபீடு செய்யும் வழிகாட்டிக் கோவையின் 02 ஆம் பந்தி	காணிகள் மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் சபையிடம் காணப்படுகின்ற காணிகள் மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	எம்பிலிபிடிய உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் மஹியங்கனை உத்தியோகபூர்வ இல்லத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியை பெற்றுக்கொள்வதற்காக அரசாங்க மதிப்பீட்டு திணைக்கள அலுவலகத்திற்கு வேண்டுதல் விடுக்கப்பட்டுள்ளது. மஹவெலி ''சீ'' வலயத்தில் மஹவெலி அதிகாரசபைக்குச் சொந்தமான டீ.கே .03 ஆம் இலக்க கட்டிடம் சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அது அமைந்துள்ள காணியை சபைக்கு ஒப்படைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பொலன்னறுவை மாவட்ட அலுவலகத்தினை விவசாய அமைச்சிற்கு ஒப்படைப்பதற்காக விவசாய அமைச்சின் செயலாளரின் மூலம் தமன்கடுவ பிரதேச செயலகத்திற்கு வேண்டுதல் கடிதத்தினை வழங்குமாறு சபையின் தலைவரினால் ஒரு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது. குருனாகல் மாவட்ட அலுவலகத்தினை சபைககு ஒப்படைப்பதற்குரிய செயற்பாடுகள் இறுதிக்கட்டத்தில்	காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையை பொறுப்பேற்று மதிப்பீடு செய்து பதிவேடுகளில் உள்ளடக்குதல் வேண்டும்.

			காணப்படுகின்றது. அந்த அமைச்சிடமிருந்து விவசாய அமைச்சிற்கு உரிய காணியையும் கட்டிடத்தையும் ஒப்படைக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.	
(க)	கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் ஆட்சேரப்பு நடைமுறை	உரிய தரத்திற்கு நியமத்து 03 ஆண்டுகள் கடப்பதற்கு முன்னர் முதலாவது வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டிய போதிலும் வனைத்திறமைகாண் தடைப்பரீட்சை நிர்ணயிக்கப்பட்டவாறு நடாத்தப்படாமையின் காரணமாக உரிய காலத்திற்குள் உத்தியோகத்தர்கள் பரீட்சையில் சித்தியடையாதிருந்த போதிலும் அது தொடர்பாக பெருட்படுத்தாது சேர்த்துக்கொள்ளப்பட்டு 03 ஆண்டுகளுக்குப் பின்னர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர்.	தற்பொழுது வினைத்திறமை காண் தடைப்பரீட்சையினை உரிய ஆண்டிற்குள் சரியாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதனால் எதிர்காலத்தில் உத்தியோகத்தர்களின் நியமனஙகளை நிரந்தரமாக்கும் நடவடிக்கையை முறைப்படியாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	நிர்ணயிக்கப்பட்டவாறு வினைத்திறனான தடைப்பரீட்சை நடாத்தப்படுதல் வேண்டும்.
(கா)	2021 சனவரி 26 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான உள்ளக சுற்றறிக்கை	எதிர்வரும் காலங்களுக்கான நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாட்டு கொள்கை இலக்கம் I இன் V ஆம் பந்தியின் பிரகாரமை அனைத்து வெளிக்கள கடமைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரம் பொதுமக்களுக்கு தெரிந்துகொள்வதற்காக காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அறிமுகப்படுத்தியுள்ள கட்டுப்பாட்டு கொள்கை இல்கம் 02 மற்றும் 03 இன் பிரகாரம் வெளிக்கள கடமைகளில்	மாவட்ட அலுவலகங்களில் சேவையாற்றுகின்ற பிரதி/ உதவி பணிப்பாளர்களின் எதிர்வரும் காலத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அனைத்து வெளிக்கள செயற்பாடுகள் சபையின் எதிர்வரும் காலத்திற்கான நிகழ்ச்சித்திட்ட அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். வழக்கமாக பிரதி/ உதவி பணிப்பாளர்களின் கடமை நிலையத்தில் எதிர்வரும் காலத்திற்கான நிகழ்சசித்திட்டங்கள் காட்சிப்படுத்துதல் இடம்பெறுகின்றது.	காட்சிப்படுத்தப்பட வேண்டிய வெளிக்கள உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்களை காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		ஈடுபடுத்தப்பட்டபடுகின்ற உத்தியோகத்தர்களால் சம்பவக் குறிப்பு புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை.	தேவைப்பாட்டிற்கு இணங்க பொது மக்களுக்கு அதனை அவதானிப்புச் செய்யும் இயலுமை காணப்படுகின்றது. வெளிக்கள கடமைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்கள் வெளிக்கள குறிப்பு புத்தகத்தை தொடர்ச்சியாக நாளதுவரையாக்குவதுடன் அலுவலக நடவடிக்கைகள் இடம்பெறும் நாட்களில் வெளிச்செல்ல வேண்டி ஏற்படும் சந்தர்ப்பங்களில் சம்பவக் குறிப்பு புத்தகங்களில் பதியப்படும்.	
(கி)	2021 சனவரி 27 ஆந் திகதிய 02/2021 ஆம் இலக்க இருப்பு புத்தகத்தை பராமரித்தல் மற்றும் நாளதுவரையாக்குவதற் கான சுற்றறிக்கை	மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் நாளதுவரைக்கிய இருப்பு புத்தகைத்தை பேணியிருக்கவில்லை.	மாவட்ட அலுவலகத்தில் காணப்படுகின்ற மூலதனப் பொருட்களை உள்ளடக்கி கடமைத் தேவைப்பாட்டின் பிரகாரம் பயன்படுத்துகின்ற பொருட்கள் சம்பந்தமாக இருப்பு பதிவேடு பேணப்பட வேண்டியதுடன் அது சம்பந்தமாக தற்பொழுது மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் உள்ளடங்கலாக அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.	இருப்பு புத்தகத்தை நாளதுவரையாகப் பேணுதல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மிளாய்வாண்டில் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் (தொகுதி) செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,182.18 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 3,884.54 மில்லியனாகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 702.36 மில்லியன் பற்றாக்குறையில் குறைவு அவதானிக்கப்பட்டது. இப்பற்றாக்குறையில் குறைவுக்கு பயிர்ச்செய்கை சேதத்திற்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு குறைவடைதல் அதற்காக தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து பெற்ற பங்களிப்பு அதிகரித்தல் மற்றும் ஓய்வூதிய பொறுப்பிற்காக ஒதுக்கீடு செய்தல் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 அடையாளங்காணப்பட்ட நட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வருமான வரிக்காக பதிவு செய்யாமையின் காரணமாக 2018 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலுத்த வேண்டிய வரிப் பணமாகிய ரூபா 299.35 மில்லியன் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் செலுத்தப்படாமையின் காரணமாக தாமத வட்டியாக ரூபா 40.87 மில்லியனை சபை செலுத்த வேண்டி இருந்தது.	சபை விவசாயக் காப்புறுதி மற்றும் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதனால் 1979 இன் 28 ஆம் இலக்க மற்றும் அதற்குப் பின்னர் அமுல்ப்படுத்தப்பட்ட 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் மூலம் சபையின் அனைத்து இலாபங்களும் வருமானங்களும் வருமான வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும் 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் மூலம் மேற்கூறிய விடுவித்தல் வழங்கப்பட்டிருக்காததனால் சபைக்கு வருமான வரியினை செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. வருமானவரி கணிப்பீட்டின் போது சாதாரண கம்பனிக்கான 30 சதவீத வரி வீதத்திற்கு இணங்க சபையினால் வரி செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் உள்நாட்:டு இறைவரி திணைக்களத்துடன் விரிவாக கலந்துரையாடப்பட்டு சபையினால் செலுத்த வேண்டிய வருமானவரி சதவீதத்தினை 14 சதவீதத்திற்கு தொடர்புபடுத்தி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க சபைக்கு நிதி ரீதியான நட்டம் ஏற்படவில்லை. இதற்கிணங்க 2024/25 ஆம் ஆண்டிலிருந்து சரியான வரிக் கடப்பாட்டினை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக வரிப் பொறுப்பினை தீர்த்துவைத்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழல் மற்றும் கமநல காப்புறுதி அதிகாரச்சட்டத்தின் 7(அ) உபபிரிவின் பிரகாரம் கமத்தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்ற நட்டத்திற்காக அவர்களுக்கு நட்டயீடு வழங்குகின்ற முழுமையான காப்புறுதி முறைமை தோற்றுவிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பாதிப்புக்கள் ஏற்பட்ட 8,185 விவசாயிகளுக்கு 2017 மற்றும் 2018 ஆம்	இப்பணம் விவசாய காப்புறுதி இழப்பீட்டு கொடுப்பனவுகளுக்கக வழங்கிய நிதி ஏற்பாடானதுடன் கொடுப்பனவு செய்யும் போது உரிமை கோரப்படாது மீண்டும் சபைக்கு அனுப்பிய பணம் ஆனதுடன் இப்பணத்தை	சமர்ப்பிக்காத இழப்பீட்டுப் பணத்தை திறைசேரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

	ஆண்டுகளுக்காக ரூபா 70.80 மில்லியன் இழப்பீட்டு பணம் கணக்கு இலக்கம், விவசாயிகளின் பெயர், அடையாள அட்டை இலக்கம் என்பன பொருந்தியிருக்காததன் காரணமாக வணிக வங்கியின் மூலம் திருப்பி அனுப்பி இருந்தும் உரிய விவசாயிகளை அடையாளங்கண்டு அத்தொகையை தீர்த்துவைப்பதற்கு அல்லது மீண்டும் திறைசேரிக்கு அனுப்புவதற்கு 06 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	விவசாய காப்புறுதி நிதியத்தினை வலுப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் விவசாய காப்புறுதி நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	எதிர்பாராத சம்பவங்களினால் உருவாகின்ற உரிமைகளுக்காக ஈடபடுத்தப்பட வேண்டிய ஒரு ஒதுக்க நிதியம் 2002 ஆம் ஆண்டிலிருந்து உருவாக்கப்பட்டிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதன் மீதி ரூபா 588.52 மில்லியனாகும். அந்த நிதியம் பயன்படுத்தப்பட வேண்டிய எதிர்பாராத சம்பவங்கள் தொடர்பாக வரையறுக்கப்பட்டு சட்ட விதிகள் உருவாக்கப்படாததினால் 2002 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 22 ஆண்டுகள் காலத்தில் இந்நிதியம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் “கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி நிதியம்” என்பதாக அறிமுகப்படுத்தப்படுகின்ற ஒரு நிதியம் சபைக்கு இருக்க வேண்டும் எனக் காட்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க ஒவ்வொரு ஆண்டிலும் செயற்பாட்டு இலாபத்திலிருந்து 05 சதவீதம் ஒதுக்கீடு செய்வதன் மூலம் இந்த நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. சபையினால் விவசாயிகளின் பங்களிப்புடன் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற ஆயுள் காப்புறுதி மற்றும் ஏனைய காப்புறுதித் திட்டங்களுக்காக உருவாகின்ற தொடக்க மூலதனம் மற்றும் மேலதிக மூலதன தேவைப்பாட்டிற்காக பணிபாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் இந்த நிதியத்தை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.	நிதியத்தை ஆரம்பிக்கும் தேவைப்பாடு மற்றும் பயன்படுத்துதல் தொடர்பாக ஒரு நியதிச்சட்டம் தயாரிக்கப்பட்டு அதற்காக முறையான அங்கீகாரத்தினைப் பெற்று அமுல்ப்படுத்த வேண்டும்.
(இ)	2007 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தில் காணப்பட்ட கூட்டு ஆயுள் காப்புறுதி நிதியத்தில் மற்றும் அது தொடர்பான முதலீடான ரூபா 251.54 மில்லியன் மீதி கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. திட்டத்தின் நிதித் தேவைப்பாட்டிற்காக 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது கூட்டு ஆயுள் காப்புறுதி நிதியத்திலிருந்து ரூபா 295.23 மில்லியன் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக 2024 ஆம் ஆண்டு வரையான திரண்ட வட்டி ரூபா 469.03 மில்லியனாகும். மீளாய்வாண்டில்	விவசாயிகள் ஓய்வூதிய திடத்தின் மரண மற்றும் பலகீன பிரதிபலன்களை செலுத்துவதற்காக ஒரு காப்புறுதித் திட்டம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் அமுல்ப்படுத்துப்படுவதுடன் அது பின்னர் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிவச் சபையினால் அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டின் போது விவசாயிகள் ஓய்வூதிய	திட்டத்திற்கு பொருளாதார ரீதியான நலன்கள் கிடைக்கும் வகையில் சரியான திர்மானம் எடுத்தல் வேண்டும்.

	திட்டத்தின் நிருவாகச் செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து பெற்ற ரூபா 249.63 மில்லியன் பணத்தில் ரூபா 12.59 மில்லியன் பணத்தை ஈடுபடுத்தி கடனில் ஒரு பகுதியாக தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க ஆயுள் காப்புறுதி நிதியத்தின் முதலீடு ஒரு கடனாக மாற்றப்பட்டிருந்தது.	திட்டத்தின் கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக நிதி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு .இணங்க இந்த நிதியத்தின் பணம் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அப்பணம் விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்திடமிருந்து மீள அறவீடு செய்யும் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதுடன் அக்கடனை படிப்படியாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஈ)	சபையின் பல்வேறு பிரிவுகளிலும் மாவட்ட அலுவலகங்களிலும் காணப்படுகின்ற மற்றும் புதிய 61 தொலைபேசிகள் வலையமைப்பாக்கப்பட்டு டெலிகொம் நிறுவனத்தின் மூலம் 2023 சனவரி மாதத்திலிருந்து புதிய உள்ளக தொலைபேசி வலையமைப்பு இணைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 2.26 மில்லியன் மற்றும் 2024 ஆம் ஆண்டிற்காக ரூபா 4.01 மில்லியனாக விலைப்பட்டியல்கள் செலுத்தப்பட்டிருந்தும் தொலைபேசி இயக்குனருக்கு கிடைக்கின்ற அழைப்புக்களை நீண்ட இலக்கங்களுக்கு மாற்றுகின்ற (Call Transfer) வசதிகள் உள்ளக தொலைபேசி வலையமைப்பு இணைப்புக்களை பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்திலேயே பெற்றுக்கொண்டிருக்காமை, அனுராதபுரம், தெஹியத்த கண்டிய, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்ட அலுவலகங்களின் தொலைபேசி இணைப்புக்கள் வலையமைப்பாக்கப்படாமை, தொலைபேசிகள் செயற்படுத்தப்படாது வைத்துள்ளமை, விவசாயிகள் ஓய்வூதிய பிரிவு மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதிய பிரிவுகளினால் வெளித்தரப்பினர்களுக்கு அழைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில் தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டிருக்காததனால் விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சின் மாவட்ட அலுவலகத்துடன் தொடர்புகொண்டு இலங்கை விவசாயிகளக்கு மிகவும் வெற்றிகரமான சேவையை வழங்குவதற்கு தேவையான பின்னணி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	வலையமைப்பாக்குதல் மேற்கொள்ளப்பட்டதானது உள்ளக தொலைபேசிகள் மற்றும் மாவட்ட அலுவலக தொலைபேசிகளை ஒன்றுக்கொன்று இணைப்புச் செய்து காணப்படுகின்ற இணைப்புச் செய்தலாகும். தொலைபேசி இயக்குனருக்கு கிடைக்கின்ற அழைப்புக்களை நீண்ட இலக்கங்கக்கு அனுப்பிவைப்பதற்காக PABX இனூடாக மாத்திரம் இந்த வசதிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்ததுடன் இதற்காக சபைக்கு ஆகக் குறைந்தது ரூபா 2.5 மில்லியன் பணம் செலவு ஏற்படும் என அவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலீன் போது தெரியப்படுத்தப்பட்டதுடன் இக்கட்டிடம் வாடகை அடிப்படையில் பேணப்படுவதனால் PABX வலையமைப்பாக்குவதற்கு செலவு செய்யப்படும் கிரயமானது அக்கட்டிடத்திலிருந்து வெளியேற வேண்டி ஏற்பட்டால் சபைக்கு ஒரு நட்டம் என்பதனால் இந்த நடைமுறைக்கான தற்காலிக பரிகாரமாக இது வழங்கப்பட்டுள்ளது. மேலும் சபைக்கு கிடைக்கின்ற அழைப்புக்களை பதிவுசெய்கின்ற வசதிகளை பெற்றுக்கொள்ளும் போது	மிகவும் வெற்றிகரமான சேவையை வழங்ககூடிய கிரயம் குறைந்த தொலைபேசி வசதிகள் வலையமைப்பினை ஸ்தாபித்தல் வேண்டும்.

		கிரயம் மற்றும் வினைத்திறன் தொடர்பாக கவனம் செலுத்துகையில் அதற்காக அதிக செலவு செய்ய வேண்டி ஏற்படுவதனால் அழைப்புக்களை பதிவுசெய்யும் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	
(உ)	1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை அதிகாரச் சட்டத்தின் 35 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு கமத்தொழில்ளர் என்பவர் பூங்கா நடவடிக்கைகள் கமத்தொழிலுக்கு, பூங்கா கல்விக்கு மருத்துவ தாவரங்களுக்கு, மீன்பிடி கைத்தொழிலுக்கு அல்லது காட்டு பயிர்ச்செய்கைக்குரிய ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற ஒரு நபர் ஒரு கமநல சேவை குழு அல்லது 1979 இன் 58 ஆம் இலக்க கமநல சேவை அதிகாரச் சட்டத்தின் கிழ் தோற்றுவிக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட ஒரு விவசாய அமைப்பு அல்லது 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனி, தேசிய அரசாங்க சபையின் 1972 இன் 05 ஆம் இலக்க கூட்டுறவு அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு கூட்டுறவு சங்கம் அல்லது இக்காலத்தில் நடைமுறைப்படுத்துகின்ற ஏதாவது ஒரு சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வேறு ஏதாவது ஒரு சங்கம் அல்லது ஏதாவது ஒரு அரசசார்பற்ற அமைப்பு என்ற விரிவான விளக்கம் காணப்பட்டிருந்தும் உண்மையாக இந்த காப்புறுதி உரிமையாளர் இல்வாறு சிறிய ஒரு நடவடிக்கையிலேனும் ஈடுபட்டுள்ளாரா என்று பௌதீக ரீதியாக அல்லது எழுத்து மூலமாக உறுதிப்படுத்திக்கொள்ளாது இந்த காப்புறுதி சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. காப்புறுதி செய்தவர் கமத்தொழிலாளரா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வது உரிய காப்புறுதி விண்ணப்ப பத்திரத்தில் அச்சிடப்பட்டுள்ள கூட்டடிற்குள் உரிய விடயங்களுக்கு சரி புள்ளடியிடுவதன் மூலம் மாத்திரம் உறுதிப்படுத்திக்கொள்ளாப்பட்டிருந்தும் அதற்காக விவசாயிகளின் ஏக்கர் வரி பெயர்ப்பட்டியல் அல்லது கமநல சேவை திணைக்களத்திடமிருந்து உறுதிப்படுத்தலேனும் இருக்கவில்லை.	சபையினால் விவசாயிகள் ஓய்வூதிய திட்டம் பயிர்ச் செய்கை காப்புறுதி திட்டம், கால்நடை காப்புறுதி திட்டம், சுவசெத மற்றும் விபத்து காப்புறுதித் திட்டம் , களஞ்சிய காப்புறுதித் திட்டம் , மூன்றாந் தரப்பு வாகன காப்புறுதி திட்டம், கடற்றொழிலாளர் ஓய்வூதிய காப்புறுதி திட்டம் என்பவைகளை உள்ளடக்கிய பல காப்புறுதித் திட்டங்கள் துறையில் அமுல்பப்டுத்தப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க காப்புறுதி சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதனாலும் சபையின் வெளிக்கள ஆளணியினர் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதனாலும் காணப்படுகின்ற அதிக அளவான செயற்பாடுக் கிரயம் மற்றும் நடைமுறை நிலைமைகளின் காரணமாக மூன்றாந்தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தினை சந்தைப்படுத்தும் போது வாடிக்கையாளர் கமத்தொழிலாளரா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பப் பத்திரங்களின் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. காப்புறுதி தத்துவங்களுக்கு இணங்க காப்புறுதி செய்பவரினால் சரியான தகவல்களை வழங்க வேண்டும் என தத்துவதில் காணப்படுவதுடன் அதனை திட்டத்தின் மூலம் வழங்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் அதிகாரச் சட்டத்தில் கமத்தொழிலாளரின் கீழ் கொண்டு வரப்படுகின்ற	கமததொழிலாளரின் நிரந்தர மற்றும் அசையும் ஆதனங்களுக்கு மாத்திரம் மூன்றாந் தரப்பு காப்புறுதித் திட்டம் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும்.

		வரையறைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கின்ற கமத்தொழிலாளர்களை பதிவுசெய்யும் ஒரு நிரந்தர நடைமுறை இல்லாததனால் நடைமுறையில் இத்திட்டத்திற்காக உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை இல்லை.	
(ஊ)	கமத்தொழில், காணிகள் மற்றும் வனவளங்கள் அமைச்சின் அலுவலகத்தை அமைப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட காணியில் தொடக்க திட்ட வரைபடம் இலக்கம் கொ.9175 இல் காணித்துண்டு இலக்கம் 02 இன் மூலம் காட்டப்பட்டிருந்த காணிப் பகுதி 2008 ஆம் ஆண்டின் போது கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் தலைமை அலுவலகத்தினை ஸ்தாபிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த காணி 2012 ஆம் ஆண்டளவில் இலங்கை நிருவாக சேவை சங்கத்திற்கு எந்த விசாரித்து பார்த்தலுமின்றி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.	காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல செவைகள் அமைச்சு செயலாளருக்கு விலாசமிடப்பட்ட 2008/05/14 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்திற்கு இணங்க கொ.7945 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் 01 ஆம் இலக்க காணித்துண்டு கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் கமத்தொழில் அமைச்சு செயலாளரின் எம்ஏஎஸ் 4/2/9 ஆம் இலக்க 2008/03/17 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 7945 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் லொட் இலக்கம் 01 தியவன்னா வடுர, ரஜமல்வத்த, பத்தரமுல்லையில் அமைந்துள்ள 0.502 ஹெக்டயரினைக் கொண்ட காணிப் பகுதியினை சபையின் தலைமை அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்காக ஒப்படைக்குமாறு காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டது. இக்காணிப் பகுதியில் ஒரு கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக சபையினால் காணிகள் மற்றும் கட்டிடங்களை அபிவிருத்தி செய்யும் சபைக்கு பணத்தை செலுத்தி உரிய கட்டிடத்தின் திட்டத்திற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டிருந்தும்	தலைமை அலுவலகத்தினை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் உரிய காணியின் 02 பகுதிகள் இலங்கை நிருவாக சேவை சங்கத்திற்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இக்காணிப் பகுதியில் சபையின் தலைமை அலுவலகத்தினை நிர்மாணிப்பதற்குத் தேவையான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மேலும் வேண்டிக்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2025 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் ரூபா 400 மில்லியன் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உரிய நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கிறேன்.	
(எ)	அனுராதபுரம் ஹரிஸ்சந்திர மாவத்தையில் 354/A இலக்கத்தில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லத்துடனான காணி, பொலன்னறுவை மாவட்ட அலுவலகம் அமைந்துள்ள காணி, அம்பாறை இந்திரசாரபு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள 280001 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் 01 ஆம் இலக்க காணித்துண்டின் 15 பேச்சஸ் காணி, குருனாகல் மாவட்ட அலுவலகம் அமைந்துள்ள காணி ஹம்பாந்தோட்டை மிரிஜிவில காணி, கண்டி மாவட்டத்தில் குண்டசாலை பிரதேசத்தில் மூ.பீ.மஹ 6656 ஆம் இலக்க திட்ட வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 107 இலுள்ள காணி என்பவற்றை சபையினால் பொறுப்பேற்பதற்கு நீண்டகாலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பொறுப்பேற்கும் நடவடிக்கை முடிவடைந்திருக்கவில்லை.	அம்பாறையிலுள்ள 15 பேச்சஸ் காணியை பொறுப்பேற்பதற்காக காணிகள் ஆணையாளர் நாயகத்திற்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் இன்றுவரை உரிய பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் தாமதமடைந்துள்ளதுடன் எதிர்காலத்தில் மேற்கூறிய காணிப்பகுதியை சபையினால் பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. கமத்தொழில் திணைக்களத்தினால் கண்டி மாவட்டத்தின் குண்டசாலை பிரதேசத்திலுள்ள காணியை பயன்படுத்தும் உரிமை சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க காணியை சபையினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலத்தில் கண்டி மாவட்ட	காணிகளை பொறுப்பேற்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		அலுவலகத்தின் புதிய கட்டிடத்தினை இக்காணியில் நிர்மாணிப்பதற்கு எதிர்பாக்கப்படுகின்றது. மாஹோ அலுவலகத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட மாகோ கமநல சேவை நிலையத்தின் இடப்பரப்பு அலுவலக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போதியதாக இல்லாததனால் முறையான பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி மாகோ நகர எல்லைக்கு மிகவும் அண்மித்ததாக ஒரு அலுவலக கட்டிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டது.	
(ஏ)	2014 ஆம் இலக்க 2017 ஏப்ரல் 07 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் III ஆம் பகுதியில் 21(2) ஆம் இலக்க அரசாங்க காணிப் பிரமாணங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலுக்கு இணங்க குருனாகல் மாவட்டத்தல் மாகோ பிரதேச செயலாளர் பிரிவினைச் சேர்நத 157 ஆம் இலக்க அடவரல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அடவரல கிராமத்தில் அ.க.பி 1844 ஆம் இலக்க திட்ட வரைபடத்திலுள்ள 263 ஆம் இலக்க காணித்துண்டில் ஒரு பகுதி 53/2006 ஆம் இலக்க உப திட்ட வரைபடத்தில் ஏ இலக்க பகுதியில் 20 பேச்சஸ் அளவிலான அரசாங்க காணித்துண்டு அலுவலக நடவடிக்கைகளுக்காக கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபைக்கு 2013 ஆகஸ்ட் 19 ஆந் திகதி வரையான 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த அறிவித்தலின் 3(ஈ) உப பிரிவின் பிரகாரம் குத்தகைக்கு பெற்றவரினால் குத்தகை ஆரம்பிக்கின்ற திகதியிலிருந்து 01 ஆண்டிற்குள் பிரதேச செயலாளரின் விருப்புக்கு இணங்க மேற்கூறிய காணி அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2024 திசெம்பர் மாதம் வரை மாகோ பிராந்திய அலுவலகத்திற்காக ஒரு கட்டிடத்தினை நிர்மாணிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படாது விளைவற்று காணப்பட்டது. அந்த அறிவுறுத்தலின் 3(எ) உப பிரிவின் பிரகாரம் காணி குத்தகை:க்கு வழங்கப்பட்டுள்ள காலத்தில் குத்தகை தாரரினால் காணி பெற்றுக்கொள்ளப்பட்ட நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் தவறி இருக்கையில் குத்தகையினை முடிவுறுத்துவதற்காக	குருனாகல் மாவட்டத்தில் மாகோ பிரதேச செயலாளர் பிரிவைச் சேரந்த 157 ஆம் இலக்க அடவரல கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள அடவரல கிராமத்தின் அ.க.பி 1844 திட்ட வரைபடத்திலுள்ள 263 ஆம் இலக்க கணித்துண்டில் ஒரு பகுதி 53/2006 ஆம் இலக்க உபதிட்ட வரைபடத்தில் ஏ இலக்க பகுதியில் 20 பேச்சஸ் அளவிலான காணித்துண்டு அலுவலக நடவடிக்கைகளுக்காக சபைக்கு முப்பது ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. இக்காலம் 2013-08-19 ஆந் திகதியிலிருந்து 2043-08-18 ஆந் திகதி வரை அமுல்ப்படுத்தப்படும். தற்பொழுது உரிய காணியை சபையினால் பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் உரிய காணியின் உரிமையை சபையினால் பொறுப்பேற்றதன் பின்னர் அலுவலக கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காணியை பொறுப்பேற்று அலுவலக நடவடிக்கைகளுக் காக பயன்படுத்துதவதற் கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	நடவடிக்கை எடுக்கப்படும் எனக் காட்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க இக்காணி சபையினால் இழக்கப்படும் ஆபத்து உள்ளதுடன் 20 பேச்சஸ் அளவிலான இக்காணியில் சபைக்காக பிராந்திய அலுவலகத்தினை நிர்மாணிக்காது 2,064 சதுர அடி அளவிலான ஒரு தனியார் கட்டிடம் ஒரு ஆண்டிற்கு ரூபா 0.66 மில்லியன் வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டு அலுவலக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.		
(ஐ)	மூன்றாந் தரப்பினர் காப்புறுதி வருமானத்தில் 05 சதவீதத்தினை ஒதுக்கீடு செய்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு இணங்க ஊக்குவிப்பு படி நிதியம் உருவாக்கப்பட்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டில் நிதியத்திற்கான ஒதுக்கீடு ரூபா 18.06 மில்லியனானதுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 38.36 மில்லியனாகும். 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 8.44 மில்லியன், 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 8.71 மில்லியன், மற்றும் 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 10.38 மில்லியன் ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்த நிதியத்தை உருவாக்குவதற்கும் ஊக்குவிப்பு படிகளைச் செலுத்துவதற்குமாக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை அதிகாரச்சட்டத்தின் மூலம் சபைக்கு இவ்வாறான நடவடிக்கைகளுக்காக அதிகாரம் வழங்கப்பட்டுள்னதுடன் அதற்கிணங்க பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மூன்றாந் தரப்பு காப்புறுதி வருமானத்தில் 05 சதவீதம் ஒதுக்கீடு செய்து இந்த ஊக்குவிப்பு படி கொடுப்பனவிற்காக உரிய நிதியம் உருவாக்கப்பட்டது. 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 38.36 மில்லியன் மீதி காணப்பட்டதுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்டையில் ஆரம்பித்து ஊக்குவிப்பு படி கொடுப்பனவிற்காக ஈடுபடுத்தப்பட்டது என குறிப்பிடுகிறேன்.	ஊக்குவிப்புபடி நியதித்தினை உருவாக்குவதற்கும் கொடுப்பனவுக்குமாக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.
(ஒ)	2024 பெப்ரவரி 28 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க தொழில் முயற்சிகளின் நிதிகள் நலன்புரிச் சங்கம் அல்லது ஏனைய எந்த நலன்புரி நடவடிக்கைகளுக்காகவும் மாற்றப்படாதிருக்க வேண்டிய போதிலும பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஊழியர்களுக்கு காப்புறுதித் திட்டத்தினை வழங்குவதற்காக ஊழியர் மருத்துவ காப்புறுதி நிதியம் உருவாக்கப்பட்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டில் தொகுதியின் பங்களிப்பு ரூபா 5.22 மில்லியன் மற்றும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதியத்தின் மீதி ரூபா 36.27 மில்லியனாகும். இந்த நிதியத்தை தோற்றுவிப்பதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஊழியர்களின் மற்றும் சபையின் பங்களிப்புடன் இந்த நிதியை உருவாக்குவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் நலன்புரிச் சங்கத்திற்கு அல்லது வேறு எந்த நலன்புரி நடவடிக்கைகளுக்கு மாற்றுதல் இடம்பெறவில்லை. சபையின் உரிமை மூலதனத்தில் ஒரு நிதியமாக காட்டப்பட்டுள்ளது. இதற்கிணங்க ரூபா 36.27 மில்லியன பணம் அந்த ஒதுக்கத்தில் காட்டப்பட்டுள்ளது.	திறைசேரியினை விசாரணை செய்யாது நலன்புரிச் சங்கம் அல்லது ஏனைய எந்த நலன்புரி நடவடிக்கைகளுக்காகவும் நிதியை மாற்றம் செய்யாதிருத்தல் வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கடற்றொழிலாளர் ஓய்வூதிய திட்டத்தில் பங்களிப்பினைப் பெற்று 60 வயதினை மிகைத்து ஓய்வூதிய வயதிற்கு வந்துள்ள 32,149 கடற்றொழிலாளர்களில் 26,093 கடற்றொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை.	இத்திட்டம் சுய நிதியின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்படாததுடன் தவணைப் பணத்தை தீர்மானிக்கும் போது அரசாங்க நிவாரணத்திற்கு உள்ளீர்க்கப்படுவதன் காரணமாக இந்நிலைமை உருவாகியுள்ளது. அதன் காரணமாக இத்திட்டத்திற்காக புதிதாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படவில்லை. எனினும் புதிய திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டிலிருந்து சேர்த்துக்கொள்ளல் மேற்கொள்ளப்படும். இத்திட்டதில் முறைப்படியாக பணத்தை செலுத்தியுள்ள 60 வயதினைப் பூர்த்திசெய்த பங்களிப்பாளர்களுக்கு பிரதிபலன்களை செலுத்துதல் மேற்கொள்ளப்படும்.	நிர்ணயித்த பங்களிப்பினைப் பெற்று பங்களிப்பு பணத்தை முறைப்படியாக செலுத்தி 60 வயதினைப் பூர்த்திசெய்த அனைத்து பங்களிப்பாளர்களுக்கும் பிரதிபலன்கள் வழங்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	மேலதிக காப்புறுதி திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுகின்ற தீங்குகளுக்கான இழப்பீடு பொதுத்திறைசேரியின் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து நிதியளிக்க முடியாத போதிலும் பயிர்ச்செய்கை சேதத்திற்கான ஒன்றுக்கு மேற்பட்ட காரணத்தை விண்ணப்ப பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள 2022/23 பெரும் போகத்தில் சேதத்திற்கு உள்ளாக்கிய 2,190 ஏக்கர் பயிர்ச் செய்கை நிலங்களின் 1,111 விவசாயிகளுக்கு தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறப்பு நிதியத்திலிருந்தும் பொதுத் திறைசேரியிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்திலிருந்து ரூபா 35.35 மில்லியன் இழப்பீட்டுப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.	பயிர் காப்புறுதிக்கான கட்டாய காப்புறுதித் திட்டத்தின் தொடக்க தவணைப் பணத்தை விவசாயிகளிடமிருந்து அறவீடு செய்யாது பொதுத் திறைசேரியினால் வழங்குவதன் அடிப்படையில் இத்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்றது. இதில் இழப்பீட்டினை செலுத்தும் போது இயற்கை அழிவுகள் மற்றும் காட்டு யானைகளால் ஏற்படும் பாதிப்புக்களுக்காக நட்டயீடு வழங்கப்படுகின்றது. தொடக்க பாதிப்புக்களின் கீழ் கொண்டு வரப்படுகின்ற பாதிப்பு சம்பவத்துடன் ஏனைய மேலதிக பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது தொடக்க தவணைப்பணம் வழங்க வேண்டியதனால் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் காப்புறுதி தத்துவங்களுக்கு இணங்க தொடக்க தவணைப் இல்லாதும் தொடக்க பாதுகாப்பு இல்லாதும் காப்புறுதி முறைமையினை அமுல்படுத்த முடியாது அதன் காரணமாக தொடக்க திட்டத்தின் ஏனைய மேலதிக திட்டங்களால் சேதம் ஏற்படுமாயின் மாத்திரம் பணம் வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளது.	மேலதிக காப்புறுதி திட்டத்தின் கீழ் தீங்குகளுக்கான இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு சபையின் நிதி ஈடுபடுத்தப்படுதல் வேண்டும்.

(இ)	1987 இன் 12 ஆம் இலக்க விவசரியகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் 60 வயது பூர்த்தியடைகையில் ஓய்வூதியத்திற்கு உரிமை பெறவேண்டிய போதிலும் அந்த வயதினை பூர்த்திசெய்த விவசாயிகளை அடையாளங்கண்டு ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருக்காததுடன் 15(1) ஆம் பிரிவின் பிரகாரம் முறைப்படியாக 05 தவணைப் பணங்களைச் செலுத்த தவறியுள்ள பங்களிப்பாளர்களுக்கு சான்றிதழின் கீழான பிரதிபலன்கள் இல்லாமல் ஆக்குவதனை பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு சபைக்கு அதிகாரம் இருந்தும் பிரதிபலன் பெறும் நபர்களினால் முறைப்படியாக 05 தவணைப் பணங்களை செலுத்த தவறியமை தவிர்க்கமுடியாத போதிலும் அவ்வப்போதேனும் 05 தவணைப் பணங்களை செலுத்தாத நபரகளும் உறுதியினை மீறியதாகக் கருதி ஓய்வூதிய நலன்கள் இல்லாமலாக்கப்பட்டிருந்தது.	விவசாயிகளுக்கு சான்றிதழ் உறுதி வழங்கப்பட்டுள்ளதுடன் பிரதிபலன்களுக்கு தகமைபெறும் கால எல்லை அதில் காட்டப்பட்டுள்ளது. 60 வது பூர்த்தியடைந்துள்ள விவசாயிகளுக்கு ஓய்வூதியம் பெற்றுக்கெள்வது தொடர்பாக தெரியப்படுத்தி கடிதம் அனுப்புதலும் வயதினை பூர்த்திசெய்துள்ள விவசாயிகளுக்கு ஓய்வூதியத்தினை செலுத்துவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் தற்பொழுது எடுக்கப்பட்டுள்ளது. 05 தவணைப் பணங்களாக கருதுவது 05 போகங்களாகும். இக்காலப்பகுதியின் போது கொடுப்பனவு மேற்கொள்ளப்படாத விவசாயிகளுக்கு தவணைப் பணத்தை செலுத்துவதற்காக சலுகைக் காலப்பகுதி சபையினால் வழங்கப்பட்டிருந்தும் அக்காலப்பகுதியின் போதும் தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களை செலுத்தாத வவசாயிகளின் பிரதிபலன்களை செலுத்துதல் மேற்கொள்ளப்பட வில்லை. எனினும் இறுதி தவணைப் பணத்தை செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதி வரை தவணைப் பணத்தை செலுத்தியுள்ள பங்களிப்பாளர்களுக்கு ஓய்வூதியம் இல்லாமல் ஆக்கப்படாததுடன் அப்பங்களிப்பாளர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு ஆலோசனைக் குழுவின் பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.	60 வயதினைப் பூர்த்தி செய்த நபர்களின் ஓய்வூதியத்தினை தாமதமின்றி செலுத்த வேண்டியதுடன் தவணைப் பணத்தை முறைபபடியாக செலுத்தாமையின் அடிப்படையில் பிரதிபலன்கள் இல்லாமல் போவது தொடர்பாக பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.
(ஈ)	விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தில் பங்களிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ் உறுதியின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் செலுத்தப்பட்டுள்ள அரையாண்டு பங்களிப்பு பணத்தின் அளவில் 75 சதவீதம் கிடைத்திருக்காமையின் காரணமாக சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு நிர்ணயிக்கப்பட்ட ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு தகமை இருந்தும் அப்பங்களிப்பளர்களுக்கு ஓய்வூதிய பிரதிபலன்கள் இல்லாமல் ஆக்கப்பட்டிருந்தது.	செலுத்தப்பட்டுள்ள அரையாண்டு பங்களிப்பு பணத்தின் அளவில் 75 சதவீதத்தினை செலுத்தியுள்ள பங்களிப்பாளர்களுக்கு பிரதிபலன்கள் இழத்தல் இடம்பெறாததுடன் வழக்கம் போல விகிதாசாரப் படியான ஓய்வூதியம் தற்பொழுதும் செலுத்தப்படுகின்றது. அவ்வாறு நிர்ணயிக்கபபட்ட தவணைப் பணத்தை செலுத்தாத போதிலும் 75 சதவீத தவணைப் பணத்தை செலுத்தியுள்ள பங்களிப்பாளர்களுக்கு விகிதாசாரப் படியான ஓய்வூதியத்தினை செலுத்துவது தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஆலோசனைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு மேலதிக	அரையாண்டு பங்களிப்பு பணத்தின் அளவில் 75 சதவீதத்தினை பெற்றுக்கொண்டதன் அடிப்படையில் ஓய்வூதிய பிரதிபலன்கள் இல்லாமலாக்கப்படாதிருத்தல் வேண்டும்.

		நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	
(உ)	1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டத்தின் 5(1) ஆம் பிரவின் பிரகாம் 18 வயதிற்கும் 59 வயதிற்கும் இடைப்பட்ட எந்தவொரு கடற்றொழிலாளருக்கும் இந்த கடற்றொழிலாளர் ஓய்வூதிய திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கு தகமை இருந்தும் 2018 ஆம் ஆண்டின் பின்னர் திட்டத்திற்கு கடற்றொழில் ஓய்வூதிய அங்கத்தவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்காததுடன் 07 ஆம் பிரிவின் பிரகாரம் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற கடற்றொழிலாளர்களுக்கு 60 வயதினைப் பூர்த்திசெய்கையில் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2007 சனவரியிலிருந்து 2017 திசெம்பர் வரையான காலம் தொடர்பாக ஓய்வூதியம் வழங்கிய 141 கடற்றொழிலாளர்களுக்கு ரூபா 4.24 மில்லியனும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது ஓய்வூதியம் வழங்கிய 56 கடற்றொழிலாளர்களுக்கு ரூபா 1.32 மில்லியனுமாக மொத்தமாக ரூபா 5.56 மில்லியன் நிலுவை ஓய்வூதியமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் கடற்றொழிலாளர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது இத்திட்டத்திற்காக பங்களிப்பாளர்களைச் சேர்த்துக்கொள்வது தொடர்பாக 13/2438 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் புதிய ஆட்சேர்ப்பிற்காக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பாக்கப்பட்டுள்ளது. நிலுவை ஓய்வூதியத்தினை படிப்படியாக எதிர்வரும் காலங்களில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	திட்டத்திற்கு புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும் 60 வயதினைப் பூர்த்திசெய்கையில் ஓய்வூதியத்தினை வழங்குவதற்கும் ஒரு வேலைத்திட்டத்தினை தயாரித்தல் வேண்டும்.
(ஊ)	2023 சிறு போகத்தின் போது இழப்பீட்டு கொடுப்பனவுகளை தகவல் தரவு முறைமைக்கு உள்ளீர்க்கும் போது தேசிய அடையாள அட்டை இலக்கம் உள்ளடக்கப்படாமை மற்றும் பிழையாக பதிவுசெய்தல் மேற்கொண்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் இதன் காரணமாக ஒரு விவசாயிக்கு ஒரே போகத்தில் பல கொடுப்பனவுகள் காணப்பட்டதா என்பதனை பரீட்சிப்பதற்கு வசதிகள் வழங்கப்படவில்லை.	2023 சிறு போக்த்தில் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளுக்காக தகவல்களை உள்ளடக்கும் போது தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது விவசாயிகள் அடையாள அட்டை பயன்படுத்தப்பட்டது. அதற்கிணங்க இழப்பீட்டுக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதுடன் தற்பொழுது தேசிய அடையாள அட்டை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. ஒரே விவசாயிக்கு ஒரே போகத்தில் இழப்பீட்டு கொடுப்பனவு செய்யும் போது இந்த இலக்கம் தொடர்பாக கவனம் செலுத்தி மிகையாக இழப்பீடு	தகவல் முறைமையின் தேவைப்பாடு மற்றும் இருக்க வேண்டிய அடிப்படை தகவல்கள் தொடர்பாக கவனம் செலுத்தி அவற்றினை உள்ளடக்கும் வகையில் சரியாக நாளதுவரையாக்கப்படுதல்

		செலுத்துவதற்குள்ள சந்தர்ப்பங்களை உச்ச அளவில் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வேண்டும்.
(எ)	2022/23 பெரும் போகத்தின் இழப்பீட்டு கொடுப்பனவுத் தகவல்களின் பிரகாரம் ஒரே இழப்பீட்டு விண்ணப்பபடிவத்தில் பயிர்ச் சேதம் ஏற்படுவதற்கான காரணமாக இலவசமாக இலாபமாக காப்புறுதி கிடைக்கும் பயிர்ச் சேதத்திற்கான காரணம் மற்றும் மேலதிக காப்புறுதி திட்டத்தின் மூலம் உள்ளடக்கப்படுகின்ற பயிர்ச் சேத காரணம் ஆகிய இரண்டும் குறிப்பிடப்பட்டதுடன் பயிர்ச் சேதத்திற்கான காரணம் உறுதியாக அடையாங்காணப்பட்டிருக்கவில்லை.	ஒரே காணியில் இலவசமாக காப்புறுதி கிடைக்கும் வெள்ளம், வறட்சி அல்லது காட்டு யானை பாதிப்புக்களின் மூலம் அதே போல மேலதிக காப்புறுதி செலுத்தப்படுகின்ற சேதங்களின் மூலமும் ஒரே தடவையில் சேதம் ஏற்படலாம். 2022/23 பெரும் போகத்தில் இழப்பீட்டு கொடுப்பனவின் போது நிரணயிக்கப்பட்ட தரவு முறைமை பயன்படுத்தப்படாததுடன் தற்பொழுது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தரவு முறைமையை பின்பற்றி இழப்பீட்டிற்கு கொடுப்பனவு செய்ய நடவடிககை எடுக்கப்பட்டுள்ளதனால் பயிர்ச் சேதத்திற்கான காரணத்தை தெளிவாக அடையாங்காண்கூடிய வகையில் தகவல்களை உள்ளடக்கி இழப்பீட்டு கொடுப்பனவுக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பயிர்ச் சேதத்திற்கான காரணத்தை அடையாங்கண்டு அதற்கிணங்க கொடுப்பனவு செய்தல் வேண்டும்.
(ஏ)	மேலதிக காப்புறுதித்திட்ட சான்றிதழ்கள் வழங்கியுளள காப்புறுதியாளர்கள் எத்தனை நபர்கள் இருக்கின்றார்கள் என்று பரீட்சிப்பதற்கு முடியுமான வகையில் சபையினால் மேலதிக காப்புறுதித் திட்ட சான்றிதழ் வழங்கிய விவசாயிகள் தொடர்பான தகவல்களை பதிவேட்டில் பதிவுசெய்து பேணியிருக்கவில்லை.	மேலதிக காப்புறுதி திட்ட சான்றிதழினை வழங்கிய விவசாயிகளின் எண்ணிக்கை தொடர்பான அறிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க மாவட்ட மட்டத்தில் அந்த தகவல்களை பெற்று எதிர்வரும் காலங்களில் தலைமை அலுவலகத்தின் செயற்பாட்டுப் பிரிவில் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகயில் நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	மேலதிக காப்புறுதியை பெறுக்கொண்ட விவசாயிகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கி ஒரு பதிவேடு பேணப்படுதல் வேண்டும்.
(ஐ)	இழப்பீட்டிற்கு விண்ணப்பித்த மேலதிக காப்புறுதித் திட்டத்தினை பெற்றுக்கொண்ட விவசாயிகளின் தகவல் பட்டியலினை தனித்தனியாகத் தயாரிக்காது அத்தகவல்கள் இலவச காப்புறுதியின் கீழ் இழப்பீட்டினை வேண்டிக் கொள்கின்ற விவசாயிகளின் தகவல்களுக்குள்ளே பேணப்பட்டிருந்தது. அதன் காரணமாக இழப்பீடு செலுத்திய விவசாயிகளுக்கு மத்தியில் இலவச காப்புறுதிக்கு தகமை பெறும் விவசாயிகள் மற்றும் மேலதிக காப்புறுதிக்கு தகமை பெறும் விவசாயிகள் தனித்தனியாக அடையாளங் காணப்பட்டிருக்கவில்லை.	மேலதிக காப்புறுதித் திட்ட சான்றிதழ் வழங்கிய விவசாயிகளின் எண்ணிக்கை தொடர்பான அறிக்கையினை மாவட்ட மட்டத்தில் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க மாவட்ட மட்டத்தில் அந்த தகவல்களைப் பெற்று எதிர்வரும் காலத்தில் தலைமை அலுவலகத்தின் செயற்பாட்டுப் பிரிவிலிருந்து தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	மேலதிக காப்புறுதித் திட்டத்தினைப் பெற்றுக்கொண்ட விவசாயிகளை தனித்தனியாக அடையாங்காணக் கூடிய வகையில் பதிவேடுகளை பேணுதல் வேண்டும்.

(ஓ)	சுற்றறிக்கை ஏற்பாடுகளின்றி மேலதிக காப்புறுதி திட்டத்தினை பெற்றுக்கொண்ட விவசாயிகளுக்கு விபத்து காப்புறுதித் திட்டம் உரிமை இல்லாதிருந்தும் பயிர் சேதத்திற்கு காரணம் உறுதியாக பூச்சிகளால் ஏற்பட்ட அழிவாக குறிப்பிட்ட 2022/23 பெரும் போகத்தில் 1,076 விவசாயிகளுக்கு இழப்பீட்டு பணத்தை கொடுப்பனவு செய்யும் போது ரூபா 0.50 மில்லியன் விபத்துக் காப்புறுதித் திட்டத்திற்காக சபையினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் அடிப்டையில் மேலதிக காப்புறுதி திட்டத்தினைப் பெற்றுக்கொண்ட விவசாயிகளுக்கு விபத்துக் காப்புறுதித் திட்டம் உரிமை இல்லாதிருந்தும் பயிர் சேதத்திற்கான காரணம் உறுதியாக கிருமிகளால் ஏற்பட்ட பாதிப்பாக குறிப்பிடப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது விபத்திற்காக சபையினால் விபத்து காப்புறுதித் திட்டத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் தற்பொழுது அந்த நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக மாவட்ட அலுவலகங்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	இலவச காப்புறுதியின் கீழ் இழப்பீட்டிற்கு உரிமையுள்ள விவசாயிகளிடமிருந்து மாத்திரம் விபத்துக் காப்புறுதி தவணைப் பணம் அறவிடப்படுதல் வேண்டும்.
(ஔ)	60 வயது பூர்த்தியடைந்துள்ள சந்தர்ப்பத்தின் போது ஓய்வூதியத்தினை வேண்டிக் கொள்வதற்குரிய விண்ணப்ப படிவங்கள் விவசாயிகளினாலேயே தமது சான்றிதழ் உறுதியினைப் பரீட்சித்து உரிய காலத்திற்குள் கொண்டு வந்து சபையிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என விவசாயிகளுக்கு தெரியப்படுத்தியிருக்காததுடன் விவசாய பங்களிப்பாளர்களால் ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தாமதம் ஏற்படுமாயின் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களுடன் தாமதத்திற்கான காரணத்தை குறிப்பிட்டு ஒரு கடிதம் விவசாயிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே 60 வயது பூர்த்தியடைந்துள்ள போதிலும் 2024 திசெமபர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வூதியத்தினை பெற்றுக்கொள்ளாத எண்ணிக்கை சரியாக அடையாங்காணப்படவில்லை.	சேர்த்துக்கொள்ளும் போது திட்டத்திற்கு பங்களிப்பினை வழங்கும் முறைமையும் பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்கின்ற முறைமையும் தொடர்பாக விவசாயிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டது. சபையினால் விவசாயிகளுக்கு பிரதிபலன்கள் கிடைக்கும் கால எல்லை அதில் காட்டப்பட்டுள்ளது. 60 வயது பூர்த்தியான விவசாயிகளுக்கு ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக தெரியப்படுத்தி கடிதத்தினை அனுப்புதல் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. இதற்கிணங்க 60 வயது பூர்த்தியான உடனே விவசாயிகளுக்கு ஓய்வூதியம் கொடுப்பனவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் தற்பொழுது எடுக்கப்பட்டுள்ளது.	60 வயது பூர்த்தியடைகின்ற சந்தர்ப்பத்தில் விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுதல் வேண்டும்.
(ஔ)	மாவில் ஆறு வான கதவினை மூடியதனால் விவசாயிகளக்கு பயிர்ச் செய்கை பாதிப்பு இழப்பீட்டினை செலுத்துவதற்காக ரூபா 07 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை 2006 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டதுடன் இது	இந்த வழக்கின் நடவடிக்கைகள் குற்றப் புலனாய்வுத் திணைக்கத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் உரிய வழக்கு தொடர்பாக சட்ட மா அதிபர் திணைக்களத்திடமிருந்து விடயத்தினை விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தொடுக்கப்பட்ட வழக்கு சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	சம்பந்தமாக தொடுக்கப்பட்ட வழக்கு சட்ட மா அதிபரின் ஆலோசனைக்காக 2007 நவம்பர் 30 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் எந்த பின்தொடர் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(க)	2008 ஆம் ஆண்டின் போது விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்திற்கு புதிய பங்களிப்பாளர்களைச் சேர்த்துக்கொள்ளலினை நிறுத்துதல் மற்றும் 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் விவசாயிகள் ஓய்வூதியம் கிடைக்காமையால் திட்டம் தொடர்பாக விவசாயிகளிடம் இருந்த நம்பிக்கை இழக்கப்பட்டதன் காரணமாக விவசாயிகளால் பங்களிப்பு பணத்தை செலுத்துதல் நிறுத்தப்பட்டதனால் தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களை செலுத்த தவறியுள்ள 918 விவசாயிகளுக்கு பணிப்பாளர் சபை தீர்மானம் இல்க்கம் 528/03 மற்றும் இலக்கம் 543/01 இன் மூலம் விசேட பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்டையில் ஓய்வூதியத்தினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் ஓய்வூதியத்தினை கணிப்பீடு செய்யும் போது செலுத்த வேண்டிய முழு தவணைப் பணத்தின் அளவினையும் செலுத்தியுள்ள ஏனைய விவசாயிகளுக்கு ஓய்வூதியம் கிடைக்காமல் இருப்பதற்கு மற்றும் கழிக்கப்பட்ட ஓய்வூதியத்தினை தயாரிக்காமைக்கு பொது இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ளாமையால் அனைத்து தவணைப் பணத்தையும் செலுத்திய எனினும் சபையின் கணிப்பீட்டிற்கு இணங்க தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களை செலுத்த தவறியுள்ள ஏனைய விவசாயிகளுக்கு ஓய்வூதியத்தினை இழக்கச் செய்து கழிக்கப்பட்ட ஓய்வூதியம் தயாரிக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு இணங்க நிர்ணயிக்கப்பட்ட தவணைப் பணங்களில் 75 சதவீதத்தினை செலுத்தி முடிவு செய்துள்ள போதிலும் முறைப்படியாக 05 தவணணைப் பணங்களை செலுத்த தவறியதனால் பங்களிப்பு இரத்துச்செய்யப்பட்டுள்ள பங்களிப்பாளர்களுக்கும் ஓய்வூதியத்தினை வழங்குவதற்கு சலுகை வழங்குவதற்காக 2025-03-24 ஆந் திகதி நடைபெற்ற 546 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனை ஆலோசனை குழுவிற்குச் சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்படும்.	அனைத்து தவணைப் பணங்களையும் செலுத்திய பங்களிப்பாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் போது உரிய உரிமை இழக்கப்படாத வகையில் பொது இணக்கப்பாட்டுடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(கா)	06 மாதங்கள் தொடர்ச்சியாக கடற்றொழிலாளர் ஓய்வூதியத்தினைப் பெற்றுககொள்ளாத ஓய்வூதியக்காரர்களின் பெயர்கள் மரணமடைந்துள்ளார்கள் என அல்லது அவ்வாறு எடுத்தக்கொள்ளாமைக்கு தாக்கமளிக்கும் காரணங்களை உறுதிப்படுத்திக்கொண்டு அந்த பட்டிலையும் காரணத்தையும் குறிப்பிட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இல்லாது ஓய்வூதிய கொடுப்பனவுகள் பெயர்பட்டியலிருந்து நீக்கப்பட்டிருந்தது.	ஆலோசனைக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் உரிய கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளதுடன் உரிய கடற்றொழிலாளர்கள் முன்வருவார்களாயின் கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது.	ஆயுள் தரவுத் தகவல்களை உறுதிப்படுத்தியதன் பின்னர மாத்திரம் ஓய்வூதிய பெயர்ப்பட்டியலில் இருந்து நீக்கப்படுதல் வேண்டும்.
(கி)	60 வயதினைப் பூர்த்திசெய்து தவணைப் பணத்தில் 75 சதவீதத்தினை விட குறைவாக செலுத்தபபட்ட கடற்றொழிலாளர்களுக்கு தேறிய தவணைப் பணத்தை மீளச் செலுத்துவதற்கு 03 மாதங்களிலிருந்து 78 மாதங்கள் வரையான காலம் எடுத்திருந்தது.	இத்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக சபையில் ஒரு உழியர் மாத்திரம் சேவையாற்றுவதுடன் எதிர்வரும் காலங்களில் புதிய திட்டங்களை ஆரம்பிப்பதுடன் போதியளவான ஊழியர் எண்ணிக்கையையும் இணைத்துக்கொண்டு கடற்றொலழிலாளர்களுக்கு துரிதமாக இக்கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடற்றொழிலாளர்களுக்கு தேறிய தவணைப் பணத்தை மீளச் செலுத்தலினை ஆகக் குறைந்த காலத்திற்குள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	சர்வசதேச நிதிக் கூட்டுத்தாபனத்துடன் (IFC) ஒன்றிணைந்து கமத்தொழில் முகாமைத்துவ தகவல் முறைமையை உருவாக்குவதற்காக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைச்சிடமிருந்து 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 20.39 மில்லியன் பணம் சபைக்கு கிடைத்துள்ளதுடன் அந்த ஆண்டின் போது அதற்காக ரூபா 23 மில்லயன் செலவு செய்யப்பட்டிருந்தும் 2024 ஆம் ஆண்டு வரை இழப்பீட்டினை கணித்தல் மற்றும் இழப்பீட்டு கொடுப்பனவு நடைமுறைக்காக தகவல் முறைமை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	முறைமைக்கு தரவுகளையும் தகவல்களையும் உள்ளடக்குவதற்காக வெளிக்கள உத்தியோகத்தர்களிடம் பொருத்தமான தொழில் நுட்ப உபகரணங்கள் இல்லாததன் காரணமாக இந்த முறைமையை வெளிக்கள நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துதல் சிக்கலாக உள்ளது. மேலும் நடைமுறை காலநிலை தரவுகளை சபைக்கு துரிதமாகவும் பணம் செலவு செய்யப்படாதும் பெற்றுக்கொள்வது சிக்கலானதாக இருப்பதன் காரணமாக முறைமையினூடாக இழப்பீட்டினை கணிப்பீடு செய்யும் நடவடிக்கையை மேற்கொள்வது சிக்கலானதாக உள்ளது.	கமத்தொழில் முகாமைத்துவ தகவல் முறைமையை தோற்றுவிக்கும் குறிக்கோள்களை நிறைவேற்றக்கூடிய சேவைகளை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(ஆ)	எம்பிலிபிடிய உத்தியோகபூர்வ இல்லம், மஹியங்கனை உத்தியோகபூர்வ இல்லம், அனுராதபுரம் உத்தியோகபூர்வ இல்லம் ஹம்பாந்தோட்டை மிரிஜ்ஜவில கட்டிடம் மற்றும் மன்னம்பிடிய, கண்டி, மாகோ, அம்பாறை காணிகள என்பன சபையினால் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.	அம்பாறை காணியை சபையினால் பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கைகள் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும். கண்டி காணியை சபையினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் கண்டி மாவட்ட அலுவலகத்தின் புதிய கட்டிடத்தினை இந்த காணியில் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மாகோ அலுவலகத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட மாகோ கமநல சேவை நிலையத்தின் இடப்பரப்பு அலுவலக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போதியதாக இல்லாததனால் முறையான பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி மாகோ நகர எல்லைக்கு மிகவும் அண்மித்ததாக அலுவலகக் கட்டிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டது.	சபையின் காணிகளும் ஆதனங்களும் பொருளாதார ரீதியாக வினைத்திறனான செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும்.
(இ)	சபைக்கு சொந்தமாக ஹம்பாந்தோட்டை, மனம்பிடிய, கண்டி, மாகோ, அம்பாறை ஆகிய பிரதேசங்களில் காணிகள் காணப்பட்டிருந்தும் அந்நகரங்களில் அமைந்துள்ள சபையின் மாவட்ட அலுவலகங்கள் 2024 ஆம் ஆண்டிற்காக ரூபா 4.30 மில்லியன் வருடாந்த வாடகையை செலுத்தி வாடகை அடிப்படையில் கட்டிடங்களை பெற்று செயற்படுத்தி வருவதுடன் அக்காணிகளை அபிவிருத்தி செய்து அலுவலக வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.	-மேற்படி-	சபைக்குச் சொந்தமான காணிகளை அபிவிருத்தி செய்து அலுவலக வசதிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

3.5 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
சபையின் முகாமைத்துவ தகவல் முறைமைக்கான தொழில் முயற்சி வளங்கள் திட்ட முறைமைக்கு (ERP System) 2023 ஆம் ஆண்டு வரை ரூபா 72 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் பின்னர் உடன்படிக்கை காலம் 2025 ஏப்ரல் 01 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தும் 2025 மே 02 ஆந் திகதி வரை அந்த நடவடிக்கை முடிவடைந்திருக்கவில்லை.	சபைச் செயற்பாடுகள் மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கொள்வனவு செய்த ERP தரவு முறைமையின் சில மொடியூல்கள் தற்பொழுது பயன்படுத்தும் நிலையில் காணப்படுவதுடன் ஏனைய மொடியூல்களை பொருத்தமான வகையில் சில மாற்றங்கள் நவீனமயப்படுத்தி வருவதுடன் இந்த நடவடிக்கைகளை இந்த ஆண்டின்	உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

	போது பூரணப்படுத்தி சபையினை முழுமையாக டிஜிடல் மயப்படுத்தக்கூடியதாக இருக்கும்.	

3.6 வாகன முறைமையை முகாமைத்துவம் செய்தல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	116-001866 ஆம் இலக்க செஸி மற்றும் 6 சிறீ 8175 ஆம் இலக்க மோட்டார் காரின் பதிவுச் சான்றிதழ் மாத்திரம் காணப்படுவதுடன் மோட்டார் வாகனம் நிறுவனத்திடம் பௌதீக ரீதியாக காணப்படவில்லை.	இந்த வாகனம் சம்பந்தமாக 574 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் விளக்கமளிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க உரிய மோட்டார் வாகனம் சம்பந்தமாக எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்க வேண்டிய முறைமை தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது.	வாகனங்களின் உரிமை மாற்றாமல் இருப்பதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் எதிர்ப்பினை கோவை செய்து உள்ளக விசாரணை மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
(ஆ)	AA2AS-813735-A ஆம் இலக்க செஸி மற்றும் 6 சிறீ 3174 ஆம் இலக்க மோட்டார் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் மாத்திரம் சபையிடம் காணப்படுவதுடன் மோட்டார் வாகனம் பௌதீக ரீதியாக நிறுவனத்திடம் இல்லாததுடன் இந்த மோட்டார் வாகனம் சம்பந்தமாக வேறு எந்த தகவலும் நிறுனத்திடம் இலலை. மோட்டார் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் நிறுவனத்திடம் காணப்பட்டிருந்தும் நிறுவனத்தின் அங்கீகாரமில்லாது அதன் உரிமை ஏனைய நபருக்கு மாற்றப்பட்டிருந்தது.	-மேற்படி-	உள்ளக விசாரணையை மேற்கொண்டு வாகனத்தின் உரிமையை மாற்றுதல் தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.